SEMAC

To,

28.05.2025

| Listing Department | Listing Department |
|---|---|
| BSE Limited | National Stock Exchange of India Limited |
| 25th Floor, P. J. Towers, | Exchange Plaza, C-1, Block G, |
| Dalal Street, | Banda Kurla Complex, Bandra East, |
| Mumbai – 400 001. | Mumbai – 400 051. |
| **Scrip Code: 505368** | **Scrip Code: SEMAC** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper publication of Audited Financial Statements (Standalone and Consolidated) for the quarter and Year ended 31st March 2025.**

In accordance with Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find the enclosed copies of the Audited Financial Statements (Standalone and Consolidated) for the quarter and year ended 31st March 2025 published in the following newspapers on 28th May 2025:

1. Malai Murasu (Tamil Newspaper) and
2. Business Standard (English Newspaper)

You are requested to take the above on record.

For Semac Construction Limited
(Formerly known as Semac Consultants Limited)

AAKRITI GUPTA
Digitally signed by AAKRITI GUPTA
Date: 2025.05.28 20:31:21 +05'30'

Aakriti Gupta
Company Secretary and Compliance Officer

**Semac Construction Ltd.**
**(Formerly Known as Semac Consultants Limited.)**
Plot No. 505, 3rd Floor, Udyog Vihar, Phase – III, Gurugram,
Haryana – 122016, India
Email: compliance.officer@semacconsultants.com

**Corporate Identity Number**
L42900TZ1977PLC000780
ISO 9001 : 2015

**Registered Office:**
**Semac Construction Ltd.**
Pollachi Road, Malumachampatti.
Coimbatore - 641 021.
Tel : + 91 422 2610851
Fax : + 91 442 6655199
Website: www.semacconstruction.com

முரசு : 14 ஒலி : 112
VOLUME: 14 ISSUE:112
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
8 PAGES PRICE: Rs.5/-
MALAI MURASU
KOVAI
Reg. No.CB/100/2024-2026
RNI Regn. No. TNTAM/2016/75063
மாலை முரசு
கோவை
www.malaimurasu.com
புதன்கிழமை/WEDNESDAY
28.5.2025 (வைகாசி-14)
★★

# ஜூன் 19–ல் ராஜ்ய சபை தேர்தல்:

# தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் அறிவிப்பு!

## ★ பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா போட்டி;
## ★ கமல்ஹாசனும் களம் காண்கிறார்!!



**சென்னை, மே 28–**

ஜூன் 19–ல் ராஜ்ய சபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் திமுக வேட்பாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா, கமல் ஹாசனும் போட்டியிடுகிறார்கள். மதிமுக பொதுச் செயலாளர் வைகோவுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

தமிழகத்தில் உள்ள 18 மாநிலங்களவை உறுப்பினர்களில், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, பாமக தலைவர் அன்புமணி, திமுக உறுப்பினர்களான வில்சன்,சண்முகம், அப்துல்லா, அதிமுகவை சேர்ந்த சந்திரசேகரன் ஆகியோரின் பதவிக்காலம் ஜூலை 24 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

6–ம் பக்கம் பார்க்க



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் ரூ.270 கோடியே 70 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய சூரை மீன் பிடி துறைமுகத்தை திறந்து வைத்தார். அருகில் அமைச்சர்கள் அனிதாராதாகிருஷ்ணன், சேகர்பாபு, கலாநிதி, வீராசாமி எம்.பி., காதர்பாட்சா என்ற முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. மீன்வளத்துறை செயலாளர் சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.

### அண்ணா பல்கலைக்கழக

## மாணவி கற்பழிப்பு வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி!

### மகளிர் சிறப்பு நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு!!

**சென்னை, மே.28–**

அண்ணா பல்கலைக்கழக மாணவி கற்பழிப்பு வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி என மகளிர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 2024–ஆம் ஆண்டு டிசம்பர் 23–ஆம் தேதி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக பல்கலைக்கழக மாணவி ஒருவர் கோட்டூர் புரம் காவல் நிலையத்தில் டிசம்பர் 24ம் தேதி புகார் அளித்தார்.

இந்த புகாரின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர், ஞானசேகரனை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 24–ஆம் தேதி கைது செய்தனர். பின்னர், கோட்டூர்புரம் காவல் துறை விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என கோரி தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் கடந்த டிசம்பர் 28ம் தேதி 3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது.

இதையடுத்து, கடந்த 2025 ஜனவரி மாதம் 5–ஆம் தேதி ஞானசேகரனை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவிட்டிருந்தார்.

வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வு குழு, கடந்த பிப்ரவரி மாதம் 24–ஆம் தேதி சென்னை சைதாப்பேட்டை 9– வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஞானசேகரனுக்கு எதிராக சுமார் 100 பக்க குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. அதில் இந்த வழக்கில் ஞானசேகரன் ஒருவர் மீது மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் இந்த வழக்கின் விசாரணையை சென்னை மகளிர் நீதிமன்றத்திற்கு கடந்த மார்ச் 7–ஆம் தேதி மாற்றப்பட்டது.

இந்த நிலையில் தனக்கு எதிராக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தவறானது எனவும் ஆதாரங்கள் இல்லாமல் தனக்கு எதிராக குற்றச்சாட்டுகளை காவல்துறை கூறியுள்ளதால், வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என ஞானசேகரன் தரப்பில் தாக்கல் செய்த மனுவை மகளிர் நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 8– ஆம் தேதி தள்ளுபடி செய்து அன்றைய தினமே குற்றச்சாட்டு பதிவு செய்தது.

அதில் பாலியல் வன்கொடுமை, ஆதாரங்களை அழித்தல், பெண்ணை சட்டவிரோதமாக கட்டுப்பாட்டில் வைத்தல், நிர்வாணப்படுத்துதல், மிரட்டல், அந்தரங்க புகைப்படம் எடுத்து வெளியிட்டது, பெண் வன்கொடுமை செய்தது உள்ளிட்ட தகவல்தொழில்

6–ம் பக்கம் பார்க்க

### மீனவர் வாழ்வாதாரம் காக்க

## கச்சத்தீவை மீட்பதுதான் ஒரே வழி!

### 3 மீன்பிடித் துறைமுகங்களை திறந்து வைத்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சு!!

**சென்னை, மே. 28–**

மீனவர்கள் வாழ்வாதாரம் காக்க கச்சத் தீவை மீட்பதுதான் ஒரே வழி என்று 3 மீன்பிடித் துறைமுகங்களை திறந்து வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறினார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.596.13 கோடி செலவில் 13 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 2 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பாக்வளைகுடா பகுதி மீனவர் குடும்ப ங்களின் வாழ்வாதாரத்திற்கான சிறப்புத் திட்டங்களையும், மகளிர் கூட்டுக் குழுக்களுக்கு நுண்கடன் வழங்கும் “அலைகள்” திட்டத்தையும் தொடங்கி வைத்து, 2,290 மீனவ பயனாளி பெருமக்களுக்கு ரூ.10.67 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

மீனவர்களின் நலனைக் காப்பதோடு, நம்முடைய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான், கடந்த ஏப்ரல் 2–ஆம் நாள் சட்டமன்றத்தில், கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று தனித்

6–ம் பக்கம் பார்க்க

## சப்-இன்ஸ்பெக்டரின் மனைவி, மகன் சாவு!

### சேலத்தில் சிகிச்சை பெற்று திரும்பிய போது கார் கவிழ்ந்தது!!

**சின்னமனூர்,மே.28–**

சின்னமனூர் அருகே உத்தமபாளையம் செல்லும் பைபாஸ் சாலையில் சென்று கொண்டிருந்த காரின் டயர் வெடித்தது. இதில் காரில் வந்த மதுரை எஸ்.ஐ. மனைவி, மகன் பலியானார்கள். மகள், உறவினர் படுகாயம் அடைந்தனர்.

மதுரை போலீஸ் ரிசர்வ் லைன் குடியிருப்பில் வசித்து வருபவர் வெள்ளை பாண்டி.இவர் காவல்துறையில் மதுரையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறார்.

இவரின் மகள் அபர்ணாவின் மருத்துவ சிகிச்சைக்காக, மகன் கௌதம் (25),மகள் அபர்ணா(22) மனைவி ஜெயா(45) ஆகிய மூவரும் சேலத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு சென்று விட்டு, உத்தமபாளையத்தில் உள்ள ஜெயாவின் தாயார் வீட்டுக்கு இன்று காலை காரில் சென்று கொண்டிருந்தனர்.



அந்த காரை ஜெயாவின் உறவினரான அருண் என்பவர் ஓட்டி வந்தார். உடன் அருணின் தாயார் தனலட்சுமி (50) காரில் உடன் வந்தனர்.

ஐந்து பேர்களுடன் கார் சின்னமனூரை கடந்து உத்தமபாளையம் நோக்கி பைபாஸ் சாலையில் சென்று கொண்டிருந்தனர். அப்போது துர்க்கை அம்மன் கோவில் அருகே காரின் டயர் வெடித்து ஒட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து கார்

6–ம் பக்கம் பார்க்க

### மாணவி கற்பழிப்பு வழக்கு தீர்ப்பு வரவேற்கத்தக்கது:

## "யார் அந்த சார்" என்ற கேள்வி இன்னும் அப்படியேதான் உள்ளது!

### எடப்பாடி பழனிசாமி அதிரடி பதிவு !!

**சென்னை, மே.28–**

அண்ணா பல்கலைக்கழக மாணவி கற்பழிப்பு வழக்கு தீர்ப்பு வரவேற்க்கத்தககது. ஆனால் யார் அந்த சார் என்ற கேள்வி இன்னும் அப்படியேதான் உள்ளது என எடப்பாடி பழனிசாமி அதிரடி பதிவிட்டுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி கற்பழிப்பு வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி என மகளிர் சிறப்பு நீதி மன்றம் இன்று அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. இது குறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசமி எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிப்பதாவது:–

நாட்டையே உலுக்கிய அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில், நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் தொடர்ந்து போராட்டம் நடத்தி, மாணவியின் குரலாக மக்கள் மன்றத்தில் ஒலித்து வந்த தொடர் முன்னெடுப்புகளின் ஊடாக, தன்னிடம் வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை மற்றும்



ஆவணங்கள் அடிப்படையில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

இருப்பினும், மக்கள் மன்றத்தில் இந்த வழக்கு குறித்து, ஸ்டாலின் மாடல் அரசு மீது நிலவும் முக்கியமான கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

இந்த வழக்கில் முதலில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் உடனடியாக விடுதலை செய்யப்பட்டது ஏன்? விடுதலை மற்றும் மீண்டும் கைதுக்கு இடையில் என்ன நடந்தது?

ஞானசேகரன் வீட்டு படுக்கையறையில்

6–ம் பக்கம் பார்க்க



கோவையில் கடந்த சில நாட்களாக பருவமழை பெய்து வருவதால் நொய்யல் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. தென்னமநல்லூர் பகுதியில் நொய்யல் ஆற்றில் பொங்கி வரும் தண்ணீரை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி இன்று காலையில் மலர் தூவி வரவேற்றார்.

# முதியோருக்கு உதவிக்கரம் நீட்டும் சென்னை மாநகர காவல்துறை!



கிரைம் ஸ்டோரி

முதுமை கொடுமை தான்.

அதை அனுபவிப்பவர்களுத்தான் தெரியும் அதன் வலி.நிலவைக்காட்டி உணவு ஊட்டி, கண்ணே. கற்கண்டே என்று குழந்தை பருவத்தில் மார்பில் அணைத்துக் கொஞ்சிய பெற்றோரை வயதான காலத்தில் தவிக்க விட்டு செல்வது இன்றைய அவசர உலகில்

சர்வசாதாரணமாகி விட்டது.இதனால்தானோ என்னவோ

முதியோர் இல்லங்களில் கூட இப்போது

நோ அட்மிஷன் என்று கூறுவதை கேட்க முடிகிறது.செல்ல பிராணிகள் போன்றவற்றிற்கு கிடைக்கும் மரியாதை கூட, இந்த நவீன உலகில் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களுக்கும், தாத்தா, பாட்டிகளுக்கும்

கிடைக்கிறதா

என்றால், கண்ணீர் தான் பதிலாகி விழுகிறது.

தனியாக வாழும் தள்ளாத முதியோரை கொலை செய்து நகையை கொள்ளையடித்து செல்லும் சம்பவம், சமீபத்தில் ,ஈரோடு மாவட்டம் சிவகிரியில் மற்றும் திருப்பூரில் அரங்கேறியது முதியோருக்கு பாதுகாப்பில்லை என்பதற்கு சாட்சியாக அமைந்துவிட்டது.

### உத்தரவு

இந்த சம்பவங்களால் தனியாக வசிக்கும் முதியோர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. இந்நிலையில், சென்னையில் வசிக்கும் முதியவர்கள், குறிப்பாக வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் தனியாக வசித்து வரும் முதியோர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்கும்படி போலீஸாருக்கு போலீஸ் கமிஷனர்

ஆ.அருண் உத்தரவிட்டார். இதையடுத்து, சென்னையில் தனியாக வசிக்கும் முதியோர்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சென்னையில் உள்ள அனைத்து காவல் நிலைய போலீசாரும் அவர்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் முதியோர்களின் பெயர், வயது, குடும்ப உறுப்பினர்களின் விவரம், தொடர்பு எண்கள் உள்பட அனைத்து விவரங்களையும் சேகரித்து வருகின்றனர். மேலும் அந்தந்த பகுதிகளில் உள்ள காவல் நிலைய எல்லைக்குள் வரும் வாக்காளர் பட்டியலை வைத்தும், முதியவர்களின் விவரங்களும் சேகரிக்கப்பட்டு வருகிறதாம்.



### அறிவுறுத்தல்

அந்த விவரங்களை காவல் நிலையங்களில் பராமரிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், முதியோர்கள் வசிக்கும் வீடுகளுக்கு தினமும் போலீசார் கட்டாயம் சென்று அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

தனியாக வசிக்கும் முதியோருக்கு மருத்துவ உதவி போன்ற அத்தியாவசிய உதவி ஏதேனும் தேவையாக இருக்கிறதா என்பதையும் போலீசார் கேட்டறிய வேண்டும் என்பது போன்ற அறிவுறுத்தல்களையும் சென்னை மாநகர் போலீஸ் கமிஷனர் ஆ.அருண் வழங்கி உள்ளார்.

மேலும், இரவு மட்டும் அல்லாமல் தேவைப்படும் நேரங்களில் ரோந்து பணிகளை முடுக்கி விடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை காவல் துறையில் ,

முதியவர்கள் பாதுகாப்பு நலன் கருதி மூத்த குடிமக்கள் பாதுகாப்பு செயலி, 14567 மற்றும் 1800 180 1253 ஆகிய முதியோர் அவசர உதவி எண்கள் செயல்பாட்டில் இருந்து வருகிறது.

இந்நிலையில் சென்னை போலீசார் தினமும் வீடுகளுக்கே சென்று முதியோர் பாதுகாப்பை உறுதி செய்வதை,

பெற்றோரை விட்டு வெளியூர், வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளுக்கு சென்று வசிப்பவர்கள் வரவேற்றுள்ளனர்.

சென்னை மாநகரில் பதவி ஏற்கும் ஒவ்வொரு போலீஸ் கமிஷனரும் முதியோர் பாதுகாப்பு பற்றி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தர விடுவார்கள்.

நாளடைவில் அது மற்ற நடவடிக்கைகளால் மறைந்து போகும்.அடுத்து வரும் கமிஷனர் முதியோர் பற்றி செய்திகள் வரும் போது மீண்டும் தனக்கென்ற பாணியில் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுவார்.



பின்பு அந்த நடவடிக்கையும் பழைய கதையாகி விடும்ஆனால் முதியோர் படும் பாடு மட்டும் தொடர்கதையாகி விடும்.

காவல்துறையில்



ரோந்து பணியில்கால் ரோந்து, வாகன ரோந்து, சைக்கிள் ரோந்து, குதிரைப்படை ரோந்து போன்றவையும் அடங்கும்.

### பாதுகாப்பு

கால் ரோந்து என்பது,காவலர்கள் நடந்து சென்று குறிப்பிட்ட பகுதிகளில் ரோந்து போவது, குற்றச் செயல்களைத் தடுத்து, பொதுமக்களின் ஆதரவைப் பெறுவது.

இந்த கால் ரோந்து இப்போது முடங்கிக்கிடக்கிறது என்பதே பொதுமக்கள் கருத்தாக உள்ளது.அடுத்து வருவதுசைக்கிள் ரோந்து.

சைக்கிள்களில் ரோந்து செல்வது, மக்கள் நெருக்கடியுள்ள பகுதிகளில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், குறுகிய தெருக்களில் மக்கள் பாதுகாப்பை கவனிப்பது.

கால் ரோந்து துவக்கத்திலேயே மக்களின் அமோக வரவேற்பை பெற்றது.

காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்கும் நல்லுணர்வு பாலமாக இருந்து வந்தது.

ஆனால் சைக்கிள் ரோந்து நாளடைவில் பஞ்சராகிப் போனது. அப்போது அரசு தரப்பில் காவல் துறைக்கு கொடுக்கப்பட்ட சைக்கிள்களும் மாயமாகிப்போனது என்பது தனிக்கதை.

நடை ரோந்தோ , சைக்கள் ரோந்தோ செல்லும்போது பொதுமக்களிடம் நேரடி தொடர்பு ஏற்படுகிறது.

குறிப்பாக முதியவர்கள் பற்றிய விபரங்களை நேரிலேயே தெரிந்து கொள்ள மக்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்து விடுகிறது. பொதுக்கள் தினமும் போலீஸ்காரர்களை பார்ப்பதால் அச்சம் கூட சற்று அச்சப்படும்.

கால் ரோந்தும், சைக்கிள் ரோந்தும் மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்பதே சென்னை வாழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது

அடுத்து வாகன ரோந்து .காவல்காரர்களின் வாகனங்களில் ரோந்து செல்வது, குற்றச் செயல்களைச் சரிபார்த்தல், பொதுமக்களின் பாதுகாப்புக்காக வாகனங்களை பயன்படுத்துதல். இந்த வாகன ரோந்து சென்னை முழுவதும் நடைபெறுவதைக் காணலாம்..இது குதிரைப்படை ரோந்து.

குதிரைகளில் ரோந்து செல்வது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட, விழாக்கால பாதுகாப்பு, கடற்கரை பாதுகாப்பு போன்ற பணிகளை செயல்படுத்துவது.

### தனிக்கவனம்

இருப்பினும் தற்போது உள்ள காவல் துறையின் ரோந்து பணியில் பொதுமக்களுக்கு அவ்வளவாக திருப்தி இல்லை என்பது சென்னைவாழ்மக்களின்

“ மவுத் டாக்”காக உள்ளது என்கிறார்கள்.

ஆனால் தற்போதுசென்னை மாநகர் போலீஸ் கமிஷனர் ஆ.அருண் தனதுநேரடி மேற்பார்வையில் முதியோர் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்து களம் இறங்கி இருப்பது துன்பப்படும் முதியோருக்கு பாதுகாப்பு நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டது என்று கூறுவதும் சென்னைவாழ் மக்கள் தான்..

நீ இருக்க...<br>
ஒரு கருவறை இருந்தது<br>
என் வயிற்றில்..!<br>
நான் இருக்க...<br>
ஓர் கழிவறை<br>
கூடவா இல்லை<br>
உன் வீட்டில்..?’

எங்களை முதியோர் இல்லத்தில் கொண்டு விட்டாயே என் மகனே!”

இல்லத்தில் இடமில்லை என்றா? இதயத்தில் இடமில்லை என்றா? இப்படி தனியாக தவிக்கும் முதியோருக்கு நாங்கள் இருக்கிறோம் என்று “பந்தம்” உதவிக்கரம் நீட்டும் ,சென்னை மாநகர் போலீஸ்,

என்று கூறும் சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் ஆ.அருண். சென்னை வாழ் முதியோர் பாதுகாப்பில் தனிக்கவனம் செலுத்தி வருகிறார்.



திண்டுக்கல் ஒய்.எம்.ஆர்.பட்டி காளியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நூற்றுக்கணக்கான பெண்கள் பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

### கோர்ட்டு உத்தரவுப்படி ஆக்கிரமிப்பை அகற்றியதால் ஆத்திரம்:

## தொழிலாளி குடும்பத்தை கல், கட்டையால் தாக்கி கொல்ல முயன்ற கும்பல்!

### மதுரையில் சி.சி.டி.வி. காட்சி வைரல்!!

மதுரை, மே. 28–

மதுரை காளவாசல் பெத்தானியாபுரம் ஆசை தம்பி தெரு என்னும் பகுதியில் குடும்பத்துடன் வசித்துவரும் சதிஸ்குமார் என்ற கூலித்தொழிலாளி அவரது வீட்டிற்கு செல்லும் பாதையில் தனி நபர் இடத்தில் வசந்த முத்து மாரியம்மன் என்ற பெயரில் கோயில் கட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தனது வீட்டிற்கு செல்வதற்கான பாதை இல்லை என கூறி பலமுறை மதுரை மாநகராட்சிக்கு மனு கொடுத்துள்ளார்.

இதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்த நிலையில் உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து மாநகராட்சிஅதிகாரிகள்முறைப்படி நோட்டீஸ் அனுப்பி பின்னர் ஆக்கிரமிப்பை அகற்றியபோது முழுமையாக அகற்றவில்லை.

இந்நிலையில் கோவில் திருவிழாவானது கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது. அப்போது சதீஷ்குமார் இல்லத்திற்கு செல்லக்கூடிய 5 அடி அகலம் உள்ள பாதையையும் முழுமையாக அடைத்துள்ளனர்.

பின்னர் கடந்த 23 ஆம் தேதியன்று இரவு கோவில் திருவிழா நடைபெற்ற போதே கோவில் நிர்வாகிகளான காசி மற்றும் அவரது உறவினர்கள் கும்பலாக வந்து திடிரென சதீஸ்குமாரின் வீட்டு முன்பாக நின்ற போது அவரை பார்த்து நீதிமன்றத்தில் வெற்றி பெற்றால் பெரிய ஆளா உனக்கு எந்த விதத்திலும் வழிவிட முடியாது என கூறியபடி அவரை தள்ளிவிட்டு ஓடகூட விடாமல் தரையில் அமர வைத்து காலால் மாறி மாறி எட்டி உதைத்து தாக்குதல் நடத்தினர்.

மேலும் அருகில் இருந்த கட்டை கற்களை எடுத்து கொலைவெறி தாக்குதல் நடத்தினர்.

அப்போது சதீஸ்குமாரின் மனைவி, மகள் ஆகியோர் கெஞ்சி கதறிய நிலையிலும் கண்டுகொள்ளாமல் கும்பலாக சேர்ந்து கொடூரமாக தாக்கியுள்ளனர்.

இதில் கைகள், தலையில் காயங்களுடன் ரத்தம் சொட்ட சொட்ட இருந்த சதீஸ்குமார்காவல் துறையினருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வந்த கரிமேடு காவல்துறையினர் விசாரணை நடத்தி சதீஸ்குமார் மற்றும் அவரது சகோதரையும் தாக்கி காயப்படுத்தியதாக கோவில் நிர்வாகிகளான காசி அவரது உறவினர்களான ஸ்ரீராம், ஜெய்கணேஷ், பாலா உள்ளிட்டோர் மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து தலைமறைவானவர்களை தேடிவருகின்றனர்.

ஆக்கிரமிப்பு அகற்றம் தொடர்பாக நீதிமன்ற உத்தரவை முழமையாகநிறைவேற்றாமல் மாநகராட்சி அலட்சியம் காட்டிய நிலையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த நபரையே கொடூரமாக கும்பலாக தாக்கியது குறித்த சிசிடிவி காட்சி வெளியாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கீழச்சிவல்பட்டி அருகே வடக்கு இளையாத்தங்குடி கிராமத்தில் பாரத பிரதமர் தார் சாலை மேம்பாடு திட்டத்தின் கீழ் சுமார் 2 கிலோ மீட்டர் வரை போடப்படும், சாலை பணிகள் கிடப்பில் போடப்பட்டதால் வாகனங்களில் செல்பவர்கள் சிரமப்படுகின்றனர்.

### இ.பி.எஸ். கையெழுத்திட்ட படிவங்களை ஏற்க கூடாது:

## தேர்தல் ஆணையத்திடம் பெங்களூர் புகழேந்தி, சூரியமூர்த்தி மனு!

சென்னை,மே.28–

மாநிலங்களவை எம்.பி. தேர்தலில் பழனிசாமி கையெழுத்திட்ட படிவங்களை ஏற்கக் கூடாது என்று தேர்தல் ஆணையத்தில் வா.புகழேந்தி, சூரியமூர்த்தி ஆகியோர் மனு அளித்துள்ளனர்.

தமிழகத்தில் விரைவில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 இடங்களுக்கு அதிமுக சார்பில் வேட்பாளர்களை நிறுத்த கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டமிட்டுள்ளார். ஏற்கெனவே பழனிசாமி பொதுச்செயலாளரானது, அவர் பல்வேறு தேர்தல்களில் இரட்டை இலை சின்னத்தை வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் படிவங்களில் கையெழுத்திட்டு வருவது தொடர்பாக வா.புகவேந்தி மற்றும் திண்டுக்கல்லை சேர்ந்த சூரியமூர்த்தி உள்ளிட்டோர் தேர்தல் ஆணையத்தில் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் புகழேந்தி வழக்கு தொடர்ந்துள்ளார். சூரியமூர்த்தி தொடர்ந்த வழக்கில், பழனிசாமியின் இடையீட்டு மனுவை ஏற்று, சென்னை உயர் நீதிமன்ற அமர்வு விசாரணைக்கு இடைக்கால தடை பிறப்பித்திருந்தது. அதனைத் தொடர்ந்து, அனைத்து தரப்பினரிடமும் கேட்டறிந்து, உயர் நீதிமன்ற அமர்வு, தடையை நீக்கி, தேர்தல் ஆணையம் விசாரிக்க உத்தரவிட்டது. அதன் தொடர்ச்சியாக புகழேந்தி உள்ளிட்ட புகார்தாரர்களை வரவழைத்து தேர்தல் ஆணையம் விசாரித்து வருகிறது. இந்த விசாரணை நிலுவையில் உள்ளது. சிவில் நீதிமன்றத்திலும் பிரதானவழக்கும்நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மாநிலங்களவை எம்.பி. தேர்தலில் பழனிசாமி கையெழுத்திட்டு அளிக்கும் படிவங்களை ஏற்கக் கூடாது என வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தில் வா.புகவேந்தி மற்றும் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி ஆகியோர் நேற்று மனு ஒன்றை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பியுள்ளனர். அந்த மனுக்களில் கூறியிருப்பதாவது:

அதிமுக தொடர்பான பிரதான சிவில் வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில்நிலுவையில் உள்ள நிலையில் அதன் தீர்ப்பு வராமல் ஏ மற்றும் பி படிவங்களை அதிமுக சார்பில் யாரும் கையெழுத்திட்டு உரிமை கொண்டாட முடியாது. உச்ச நீதிமன்றம் தற்காலிகமாகத்தான் ஈரோடு இடைத்தேர்தலுக்கு இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்த அனுமதி அளித்தது. அதேநேரத்தில் வேறு எந்த தேர்தலுக்கும் பயன்படுத்தக் கூடாது என்றும் ஆணை பிறப்பித்தது.

ஆனால் அதையும் மீறி கடந்த மக்களவைத் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தை பழனிசாமி அறிவித்த வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையம் தவறாக வழங்கியது. இது உச்ச நீதிமன்ற ஆணைக்கு எதிரானது. தேர்தல் ஆணையம் அவரை பொதுச்செயலாளர் என்று ஒப்புக்கொள்ளவில்லை. தான் பொதுச்செயலாளர் என்று அவரே கூறிக் கொள்கிறார். அவருக்கு தவறாக இரட்டை இலை சின்னத்தை வழங்கினால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அமைந்து விடும்.

எனவே, மாநிலங்களவைத் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தை பழனிசாமிக்கு வழங்கக் கூடாது. மாநிலங்களவை எம்.பி. தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்ய அதிமுக பெயரில்பழனிசாமிகையெழுத்திட்ட ஏ மற்றும் பி படிவங்களை சமர்ப்பித்தால் அதை தேர்தல் ஆணையம் ஏற்கக் கூடாது.

அதேபோல் அதிமுக சார்பில் யார் ஏ மற்றும் பி படிவங்களில் கையெழுத்துட்டு சமர்ப்பித்தாலும் அதனை ஏற்கக்கூடாது. பழனிசாமி அதிமுக பெயரை பயன்படுத்தி அறிவிக்கும் வேட்பாளர்களை அதிமுக வேட்பாளர்களாக ஏற்க கூடாது. இதை மீறி தேர்தல் ஆணையம் சின்னத்தை பழனிசாமிக்கு வழங்கினால் உச்ச நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு உட்படுத்தப்படும். இவ்வாறு மனுக்களில் கூறப்பட்டுள்ளது.

### திண்டுக்கல் அருகே

## தம்பியுடன் பைக்கில் சென்ற பெண் பலி!

திண்டுக்கல்,மே.28–

திண்டுக்கல் அருகே இருசக்கர வாகனத்தில் தம்பியுடன் சென்ற அக்கா இருசக்கர வாகன மோதி பலியானார்.

திண்டுக்கல் அருகே உள்ள கோமணம் பட்டியைச் சேர்ந்தவர் தர்மர்(36). இவர் நேற்று தனது அக்காள் மீனாவை அழைத்து கொண்டு விளாம் பட்டி பள்ளிவாசல் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது அதே சாலையில் பின்னால் மேல மேட்டுப்பட்டியை சேர்ந்த மைதீன் பிச்சை ஓட்டி வந்த இரு சக்கர வாகனம் இவர்கள் மீது மோதியது. இதில் மீனா . உயிரிழந்தார். காயமடைந்த தர்மர் நத்தம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### வழக்கை துரிதமாக நடத்தி

# ஐந்தே மாதத்தில் நீதியை பெற்றுத் தந்துள்ளோம்!

## மாணவி கற்பழிப்பு வழக்கு தீர்ப்பு குறித்து ஸ்டாலின் வலைதளப் பதிவு!!

சென்னை, மே.28–

வழக்கை துரிதமாக நடத்தி ஐந்தே மாதத்தில் நீதியை பெற்றுத்தந்துள்ளோம் என மாணவி கற்பழிப்பு தீர்ப்பு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

சென்னை மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வழக்கைத் துரிதமாக நடத்தி, ஐந்தே மாதத்தில் நீதியைப் பெற்றுத் தந்துள்ளது நமது காவல்துறை. விசாரணை அதிகாரிகளுக்கும் அரசு வழக்கறிஞர்களுக்கும் மாண்பமை நீதிமன்றத்துக்கும் நன்றி!

காவல்துறையினரிடம் நான் தொடர்ந்து கூறுவது: "குற்றம் நடக்கக் கூடாது; நடந்தால் எந்தக் குற்றவாளியும் தப்பக் கூடாது; விசாரணையைத் துரிதமாக நடத்தி, தண்டனை பெற்றுத் தர வேண்டும்!".

குற்றங்களின் கூடாரமாக அன்று அரசை நடத்தி, இன்று அவதூறுகளை அள்ளித் தெளித்து, மலிவான அரசியல் செய்யத் துடித்த எதிர்க்கட்சியினரின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கி உள்ளோம்.

சட்டநீதியையும் பெண்கள் பாதுகாப்பையும் எந்நாளும் உறுதிசெய்வோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆ.ராசா எம்.பி. நேரில் பார்வையிட்டார். அருகில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உள்ளார்.

### சென்னையில்

# எடப்பாடி பழனிசாமி வீட்டிற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்!

சென்னை, மே. 28–

சென்னை அபிராமபுரம் கிரீன்வி சாலையில் உள்ள தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சென்னை அபிராமபுரம் கிரீன்வேஸ் சாலையில் உள்ள அரசுகுடியிருப்பில் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வசித்து வருகிறார். இந்நிலையில் நேற்று தமிழக காவல்துறை தலைவர் மற்றும் கூடுதல் டிஜிபி ஆகியோரின் அலுவலக இ –மெயில் முகவரிக்கு குறுஞ்செய்தி ஒன்று வந்தது.. அதில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வீட்டில் வெடிகுண்டு வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

உடனே சம்மந்தப்பட்ட அலுவலக ஊழியர்கள் இது குறித்து அபிராமபுரம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்ப நாயுடன் சென்று எடப்பாடி பழனிசாமி வீட்டில் சோதனை நடத்தினர்.

நீண்ட நேர சோதனைக்கு பின் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்தது. இதனைஅடுத்து அபிராமபுரம் போலீஸார் வெடிகுண்டு மிரட்டல் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டனர்..

நேற்று முன்தினம் மூன்றாவது முறையாக அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்கதூதரகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது அதே போன்று எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கும் வெடிகுண்டு மிரட்டல் வந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவம் அதிகரித்து வருகிறது.

### அரசின் உறுதியான நடவடிக்கையால்

# மாணவி பாலியல் வழக்கில் குற்றவாளிக்கு 5 மாதங்களில் தண்டனை!

## தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி அறிக்கை!!

சென்னை, மே. 28–

தமிழக அரசின் உறுதியான நடவடிக்கையால் அண்ணா பல்கலைக்கழக மாணவி கற்பழிப்பு வழக்கில் குற்றவாளிக்கு 5 மாதங்களில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என ஆர்.எஸ். பாரதி கூறியுள்ளார்.



தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுருப்பதாவது:–

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23–ஆம் தேதி சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தில் குற்றவாளியை உடனடியாகக் கைது செய்து தண்டனைப் பெற்று தருவதற்கான உறுதியான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்தது.

குற்றம் நடந்த 24 மணி நேரத்திற்குள் குற்றச்செயலில் ஈடுபட்ட ஞானசேகரனை தமிழ்நாடு காவல்துறை கைது செய்தது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு விரைவான நீதியையும், குற்றவாளிக்கு கடுமையான தண்டனையையும் பெற்றுத்தரவேண்டும் எனும் முனைப்போடு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணா பல்கலைக்கழக வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் எனத் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதனடிப்படையில் கடந்த பிப்ரவரி 24–ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளி தப்பிக்க முடியாத வகையில் ஆதாரங்களைத் திரட்டி வலுவான வாதங்களை நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு எடுத்து வைத்ததின் அடிப்படையில் இன்று 5 மாதத்தில் ஞானசேகரன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும் அவர்களுக்கான விரைவான நீதியைப் பெற்றுத் தருவதிலும் திராவிட மாடல் அரசு காட்டும் உறுதிப்பாட்டிற்கும் நடவடிக்கைகளுக்கும் இந்தத் தீர்ப்புச் சாட்சியாகியிருப்பது தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பெண்களுக்கு எதிரான எந்தக் குற்றங்களையும் சகித்துக் கொள்ளாது, அதற்கெதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பாதிக்கப்பட்டோருக்கு விரைவான நீதியைப் பெற்றுத் தரும் என்பது மக்கள் மன்றத்தில் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு துறை தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் சிவனருள் மற்றும் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் ஆகியோர் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

### கன்னட மொழி குறித்து சர்ச்சை பேச்சு:

# கமல் நடித்த 'தக் லைப்' படத்திற்கு கர்நாடகாவில் கடும் எதிர்ப்பு!

## சினிமா பேனர்களும் கிழித்து எறியப்பட்டது!!

பெங்களூர்,மே.28–

மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துள்ள 'தக் லைப்' திரைப்படம் வரும் ஜூன் 5ந்தேதி வெளியாக உள்ளது. இந்த படத்தின் புரமோஷன் பணிகளில் படக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கன்னட நடிகர் சிவராஜ்குமார் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நடிகர் கமல்ஹாசன், "உயிரின் உறவே தமிழே! எனது வாழ்க்கையும், குடும்பமும் தமிழ் மொழிதான். எனது குடும்பம் இங்கு இருக்கிறது. அதனால் தான் சிவராஜ்குமார் இங்கு வந்துள்ளார். அவரது மொழி(கன்னடம்) தமிழ் மொழியில் இருந்து பிறந்தது. அவரும் நமது குடும்பத்தில் ஒரு அங்கமாவார்" என்று தெரிவித்தார்.

இந்நிலையில், கமல்ஹாசனின் பேச்சுக்கு கர்நாடகத்தில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கர்நாடக மாநில பா.ஜ.க. தலைவர் எடியூரப்பா இது குறித்து 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தாய்மொழியை நேசிக்க வேண்டும். ஆனால் அதற்காக பிற மொழிகளை அவமதிப்பது அநாகரீகமான செயல்.

குறிப்பாக கலைஞர்கள் ஒவ்வொரு மொழியையும் மதிக்கும் பண்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். கன்னடம் உட்பட பல இந்திய மொழிகளில் நடித்துள்ள நடிகர் கமல்ஹாசன், தனது தமிழ் மொழியை போற்றுவதற்காக நடிகர் சிவராஜ்குமாரையும் சேர்த்து கன்னடத்தை அவமதித்திருப்பது ஆணவம் மற்றும் ஆணவத்தின் உச்சம்.

தென்னிந்தியாவிற்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய கமல்ஹாசன், கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து இந்து மதத்தை அவமதித்து, மத உணர்வுகளைப் புண்படுத்தி வருகிறார். இப்போது, 6.5 கோடி கன்னடர்களின் சுயமரியாதையை புண்படுத்தி கன்னடத்தை அவமதித்துள்ளார். கமல்ஹாசன் உடனடியாக கன்னட மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 'தக் லைப்' பட பேனரை கன்னட அமைப்பினர் இன்று கிழித்தனர். கமல்ஹாசனுக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### இ.டி.க்கு பயம் இல்லை என்றால்

# உதயநிதி ஏன் நண்பர்களை லண்டனுக்கு அனுப்ப வேண்டும்!

## நயினார் நாகேந்திரன் கேள்வி!!

மதுரை, மே .28–

மதுரை வண்டியூர் அம்மாதிடலில் ஜூன் 22–ம் தேதி இந்து முன்னணி அமைப்பின் சார்பில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இம்மாநாட்டின் பூமிபூஜை நிகழ்வில் தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், இந்து முன்னணி தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியதாவது:–



எங்கள் கூட்டணியை பார்த்து பயம் வந்தது உண்மைதான் திமுக பொதுக்குழு நடத்துவது அவர்களுடைய கட்சியின் உரிமை

மோடிக்கு பயப்பட மாட்டேன் இ.டி க்கு பயப்பட மாட்டேன் என்று உதயநிதி தொடர்ந்து கூறி வருகிறார்.

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இ.டி. ரைடு எங்கு நடந்தது உங்களுக்கு தெரியும் காங்கிரஸ் ஆட்சி நடந்தது அப்போது கூட்டணியில் இருந்தார்கள் மேலே இ.டி. ரைடு நடக்கும் பொழுது கீழே பேச்சு வார்த்தை நடந்தது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அப்போது சின்ன வயதில் இருந்திருப்பார் அதனால் இ.டி.க்கு இப்ப வரை பயம் இருக்கு இல்லையென்றால் ரித்திசும், விக்ரம் ரெஜும் எதற்காக பயந்து லண்டன் போக வேண்டும் இங்கே இருக்கவேண்டியதானே உதயநிதி நண்பர்களை கூடவே கூட்டிட்டு போக வேண்டிதானே இ.டி .பயம் இல்லைனால் ஏன் ஓடி ஒளிய வேண்டும் இ.டி.க்கு பயந்து நண்பரை ஏன் லண்டனுக்கு அனுப்ப வேண்டும் முழுக்க முழுக்க இந்த மாநாடு பக்தி மாநாடு ஏற்கனவே அரசாங்கம் சார்பில் இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகபாபு இது போன்ற மாநாடு நடத்திருக்கிறார்கள் அது வேறு இது சிறந்த பொதுமக்கள் பயனுள்ள பக்தி மாநாடாக அமையும்

அண்ணாமலை வேல் யாத்திரை நடைபயணம் நடத்தினார்

என்னுடைய யாத்திரை சட்டமன்றத்தை நோக்கி சட்டமன்ற உறுப்பினர்களை சட்டமன்றத்திற்கு யாத்திரையாக செல்வது தான் என்னுடைய யாத்திரை

முந்தைய தேர்தலில் நான் பேராசிரியர் சீனிவாசன் உட்பட சிலர் இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளோம் இனி முதல் இடத்திற்கு வந்து சட்ட மன்றத்திற்கு போவோம்

முதலமைச்சர் நிதி ஆயோக் கூட்டத்திற்கு முதலில் போகிற மாதிரியும் அதற்குப் பிறகு போற மாதிரி இல்லை லன் னு ஒரு கருத்தை சொன்னார் அதற்குப் பிறகு சூழ்நிலைக்கு ஏற்ற அடிப்படையில் எதற்காகபோனார் என்று நீங்கள் கேட்டால் விளக்கமாக சொல்வார்

பிரதமர் மோடியை தனியாகவும் சந்தித்து பார்த்து பேசியது பற்றி ஊடகங்கள் கேட்டால் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கம் தெரியும்

இ.டி.ரெய்டுக்காகதான் முதல்வர் பிரதமரை சந்தித்தார் என்று வி

எங்கள் எண்ணமும் அதுவாகதான் இருக்கிறது இவ்வாறு அவர் கூறினார்.



தொடர் மழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளனர்.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.480 குறைந்தது!

சென்னை, மே. 28–

தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.480 குறைந்து ரூ.71,480க்கு விற்பனையாகிறது.

தங்கம் விலை கடந்த சில நாள்களாக திடீர் ஏற்ற, இறக்கமாக இருந்து. வருகிறது.. இருப்பினும், தங்கம் மீதுமுதலீடுசெய்யபலரும்ஆர்வம்காட்டிவருகின்றனர். தங்கம் விலை (மே 23) அன்று சவரனுக்கு ரூ.280 குறைந்தது. கடந்த மாதம் 22ம் தேதி தங்கம் விலை சவரன் ரூ.74,320க்கு விற்பனையானது. இது தங்கம் விலை வரலாற்றில் இதுவரை இல்லாத புதிய உச்சமாகும்.பின்னர் படிப்படியாக குறைந்தது. நேற்று (செவ்வாய்க்கிழமை) தங்கம் விலை கிராமுக்கு ரூ.45 உயர்ந்து ரூ.8,995க்கும், பவுனுக்கு ரூ.360 உயர்ந்து ரூ.71,960க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், இன்று (புதன்கிழமை) கிராமுக்கு ரூ.60 குறைந்து ரூ.8,935க்கும், பவுனுக்கு ரூ.480 குறைந்து ரூ.71,480க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை தொடர்ந்து 4ஆவது நாளாக மாற்றமின்றி கிராம் ரூ.111க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.1,11,000க்கும் விற்பனையாகிறது.

# காஷ்மீர் பொருளாதாரத்தில் வீழ்ச்சி!

ஸ்ரீநகர், மே.28

ஜம்மு – காஷ்மீர் சுற்றுலா வாயிலாகவும் விவசாயம் வாயிலாகவும் பொருளாதார ரீதியாக வளம் கொழிக்கும் பிரதேசமாகும். அண்மையில் பஹல்காமில் ஏற்பட்ட ரத்தக் களரியை அடுத்து சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து விட்டது. நட்சத்திர ஓட்டல்கள் பெரும்பாலும் காலியாகவே உள்ளன.

காஷ்மீர் விவசாயமும் பருவநிலை மாற்றம் காரணமாக பின்னடைவை எதிர்கொண்டு வருகிறது. 15 ஆண்டுகளுக்கு முன் காஷ்மீரின் உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு 28 சதவீதமாக இருந்தது. இது 20 சதவீதமாக குறைந்து விட்டது. காஷ்மீர் பொருளாதாரத்தில் ஆப்பிளுக்கும் குங்குமப் பூவுக்கும் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. பருவநிலை மாற்றம் காரணமாக ஆப்பிள் விளைச்சல் கடும் பாதிப்புக்கு இலக்காகியுள்ளது என்று விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரின் நெல் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. ஆனால் விற்பனைவாய்ப்பு அதிகமுள்ள காரணத்தால் சோளம் சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது என்று வேளாண் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.


தமிழ்நாடு அரசு
ஈரோடு மாவட்டம் - பேரூராட்சிகள் நிர்வாகம்
பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி
கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் - 2025-2026
புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்துதல்

ந.க.எண்.76/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள். 28.05.2025

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. ஈரோடு மாவட்டம், பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரால் குடிநீர் திட்டப்பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 Improvement of Water Supply System | 754.00.000/- | 15.08.000/- |

3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை, https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 29.05.2025 முதல் 17.06.2025 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக்கொள்ளலாம்.

| 4. | | |
|---|---|---|
| | அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் | 17.06.2025 மாலை 3.00 மணி |
| | ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 17.06.2025 மாலை 3.30 மணி |

செயல் அலுவலர்
செ.ம.தொ.இ /2596/ ஒப்பந்தப்புள்ளி /2025 பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்



ஒட்டன்சத்திரம் நகராட்சி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை)

ந.க.எண்.973/2025/இ1 நாள். 26.05.2025

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 15–வது நிதி ஆணையத்தின் சுகாதார மானியம் 2025–26–இன் கீழ் மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் பணிக்கு கீழ்க்கண்ட நாளில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒரு சதவீதம் வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தப்பட வேண்டும். மேலும் கூடுதல் விவரங்களை ஒட்டன்சத்திரம் நகராட்சி பொறியியல் பிரிவில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்
1. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்துகொள்ள கடைசி நாள் : 10.06.2025 மாலை 5.00 மணி வரை
2. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் (Online) : 11.06.2025 மாலை 3.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 11.06.2025 மாலை 3.30 மணி

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | வைப்புத் தொகை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| | 15–வது நிதி ஆணையத்தின் சுகாதார மானியம் 2025–26 | | | |
| 1 | ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணி. | 150.00 | 1,50,000/– | 150 நாட்கள் |

செ.ம.தொ.இ/ 2615 /ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், ஒட்டன்சத்திரம் நகராட்சி



அரூர் சிறப்பு நிலை பேரூராட்சி
தருமபுரி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தருமபுரி மாவட்டம், அரூர் பேரூராட்சியில் 2025–2026ம் ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் அரூர் பேரூராட்சியில் அறிவுசார் மையம் கட்டுதல் பணியினை ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் ஆன்லைன் மூலம் மட்டுமே (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
அ) முன் கலந்தாய்வு கூட்டம் – 30.05.2025 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 06.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 06.06.2025 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

ந.க.எண்.181/2025/அ1. நாள்: 05.05.2025 செயல் அலுவலர்(பொ)
செ.ம.தொ.இ/2616/ஒப்பந்தப்புள்ளி/2025 சிறப்பு நிலைப் பேரூராட்சி, அரூர் தருமபுரி மாவட்டம்.



தமிழ்நாடு அரசு
உதயேந்திரம் முதல்நிலை பேரூராட்சி
திருப்பத்தூர் மாவட்டம்

ந.க.எண்.322/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.22.05.2025

திருப்பத்தூர் மாவட்டம், உதயேந்திரம் முதல்நிலை பேரூராட்சியில் அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் 2025–2026ன்கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக சமுதாய கூடம் அமைக்கும் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை மற்றும் மின்னணு ஒப்பந்த முறையில்) வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
அ) முன் கலந்தாய்வு கூட்டம் : 29.05.2025 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 11.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 11.06.2025 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்,
செ.ம.தொ.இ./2609/ஒப்பந்தப்புள்ளி/2025 உதயேந்திரம் முதல்நிலை பேரூராட்சி, திருப்பத்தூர் மாவட்டம்.



HOSUR PRECISION TOOLINGS PRIVATE LIMITED,
S.No. 72/1 Addakuriki Village, Shoolagiri Taluk, Krishnagiri District, Tamilnadu – 635117
(Tender No. SIDCO/Schemes/CFC/05/2024 Date: 28.05.2025)

E-TENDER NOTICE

The Director M/s Hosur Precision Toolings Private Limited, Krishnagiri District, Tamilnadu, India invites Tender from reputed Manufacturers, Distributors or authorized Dealers for the supply, installation, testing and commissioning of the following Machinery & Equipment for the setting up of CFC with the grant assistance from GoI and GoTN under the MSE CDP scheme of GoI.

| ITEM | PARTICULAR | QTY in Nos. | EMD in Rs. | Appx. Value Rs. in Lakhs | Period of Completion |
|---|---|---|---|---|---|
| 1 | 5 AXIS VMC MILLING MACHINE | 1 | 1,55,000/- | 290.30 | 3 Months |
| 2 | WIRE CUTTING MACHINE | 1 | 74,000/- | 127.68 | 3 Months |
| 3 | CYLINDRICAL GRINDING MACHINE | 1 | 24,000/- | 27.75 | 3 Months |
| 4 | VERTICAL MACHINING CENTRE | 1 | 43,000/- | 65.55 | 3 Months |
| 5 | CNC LATHE | 1 | 32,000/- | 44.25 | 3 Months |
| 6 | CENTRE LATHE -25" CENTRE HEIGHT | 1 | 24,000/- | 27.51 | 3 Months |
| 7 | EOT CRANE | 1 | 18,000/- | 17.70 | 3 Months |
| 8 | MEASURING INSTRUMENTS | 1 Set | 55,000/- | 90.28 | 3 Months |
| 9 | COMPRESSOR | 1 | 19,000/- | 18.81 | 3 Months |
| 10 | LASER CUTTING | 1 | 1,27,000/- | 234.44 | 3 Months |
| 11 | TOOL GRINDER 5 AXIS | 1 | 1,14,000/- | 208.91 | 3 Months |
| 12 | INJECTION MOULDING | 1 | 85,000/- | 150.49 | 3 Months |
| 13 | ELECTRICAL INSTALLATION AND FITTINGS | 1 | 41,000/- | 61.70 | 3 Months |
| 14 | DIESEL GENSET | 1 | 24,000/- | 27.28 | 3 Months |

The e-tender document can be applied through website www.tntenders.gov.in and contact Shri. Rajinikanth contact +91 9750922911, hosurprecisiontoolingspvtltd@gmail.com.

| | |
|---|---|
| Availability of Tender | 28.05.2025 @ 11:00 am |
| Date of Pre-Bid Meeting @ SIDCO CO | 11.06.2025 @ 11:00 am |
| Last Date for receipt of E-Tenders | 27.06.2025 @ 02:00 pm |
| Date of Opening of Technical Bids | 27.06.2025 @ 03:00 pm |

Director,
M/s Hosur Precision Toolings Private Limited
DIPR/ 2620 /TENDER/2025

### தொடர் மழையால்

# கோவை மாவட்டத்தில் 6 குளங்கள் நிரம்பின!

## சிறுவாணி அணை நீர்மட்டமும் உயர்ந்தது!!

கோவை,மே.28–
கோவை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் 6 குளங்கள் நிரம்பின, சிறுவாணி அணையின் நீர்மட்டம் 32.73 அடியாக உயர்ந்து உள்ளது.

கோவை மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக தொடர்மழை பெய்து வருகிறது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பலத்த மழை பெய்வதால் கோவை குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எனவே அங்கு சுற்றுலாப் பயணிகள் குளிக்க வனத் துறையினர் தடை விதித்தனர் . தென் கைலாயம் என்று அழைக்கப்படும் வெள்ளியங்கிரி மலை ஏறவும் பக்தர்களுக்குதற்காலிகதடை விதிக்கப்பட்டது.

மழை காரணமாக நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. வினாடிக்கு 650 கன அடி வீதம் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. எனவே பொதுமக்கள் யாரும் ஆற்றில் இறங்கி குளிக்க வேண்டாம் என பொதுப் பணித் துறையினர் தெரிவித்து உள்ளனர்.

நொய்யல் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக சித்திரைச்சாவடி, குனியமுத்தூர் புட்டுவிக்கி, உள்ளிட்ட தடுப்பணைகள் நிரம்பி வழிகின்றன. வெள்ளலூர் தரைப்பாலத்தை மூழ்கடித்தபடி நொய்யல் ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது.

இதைத் தொடர்ந்து நொய்யல் ஆற்றில் வரும் தண்ணீர் ராஜாவாய்க்கால் மூலம் குளங்களுக்கு திருப்பி விடப்பட்டு உள்ளது. இதனால் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்து, நீர்மட்டம் மள மளவென்று உயர்ந்து வருகிறது. இதில் கிருஷ்ணாம்பதி குளம், செல்வம்பதி குளம், குமாரசாமி குளம், சிங்காநல்லூர் குளம், இருகூர் குளம் ஆகிய 6 குளங்கள் முழுவதும் நிரம்பி விட்டது. அதில் இருந்து உபரி நீர் வெளியேறி வருகிறது. பேரூர் பெரியகுளம், வாலாங்குளம், உக்கடம், நீலாம்பூர் குளம், சூலூர் பெரியகுளம், சூலூர் சின்னகுளம் ஆகிய 6 குளங்கள் 90 சதவீதத்திற்கு மேல் நிரம்பி உள்ளது.

கோடை காலத்தில் தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்ட கோளராம்பதி குளத்தில் தற்பொழுது 22 சதவீத தண்ணீர் நிரம்பி காணப்படுகிறது. சொட்டையாண்டி குட்டை மற்றும் கங்கா நாராயண சமுத்திரம் ஆகிய குளங்களில் 20% அளவுக்கு தண்ணீர் உள்ளது. இன்னும் சில நாட்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்ததால் இந்த குளங்களும் நிரம்பி விடும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவை மாநகருக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணையின் நீர் பிடிப்பு பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பலத்த மழை பெய்து வருகிறது.இதனால்அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர் மட்டம் கிடுகிடு என உயர்ந்து வருகிறது.நேற்று முன்தினம் அணையின் நீர் மட்டம் 26.6 அடியாக இருந்தது நேற்று ஒரே நாளில் 4 அடி அதிகரித்து 30.50அடியாக காணப்பட்டது. இதை அடுத்து இன்று அதிகாலை எட்டு மணி நிலவரப்படி 32.73 அடியாக உயர்ந்து உள்ளது. 49 அடி உயரம் கொண்ட சிறுவாணி அணை பாதுகாப்பு கருதி 45 அடி உயரம் வரை மட்டுமே தண்ணீர் தேக்கி வைக்க கேரளா அதிகாரிகள் அனுமதிக்கின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சிறுவாணி அணையின் நீர்மட்டம் சுமார் 10 அடிக்கு மேல் உயர்ந்து உள்ளதாக குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.



கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வெள்ளானப்பட்டி சாலை, வீரியம்பாளையம் பள்ளம் தூர்வாரும் பணிகள் மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# அரசு மருத்துவமனையில் உயிரிழந்த பெண்ணிடம் தாலியை திருடியவர் கைது!

கோவை,மே.28–
கோவை அரசு மருத்துவமனையில் உயிரிழந்த பெண்ணின் தாலியைத் திருடியவரை போலீசார் கைது செய்தனர்.கோவை அரசு மருத்துவமனையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் ஏராளமானோர் சிகிச்சைக்கு வந்து செல்கின்றனர்.

உள்நோயாளி களாகவும் பலர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், கோவை பாப்பநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த செல்வி என்பவரின் தாயார் உடல் நலக்குறைவால் கடந்த 20ஆம் தேதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையில் செல்வியின் தாயார் 21–ம் தேதி உயிரிழந்தார். அப்போது, அவரது தாயார் அணிந்திருந்த 6 கிராம் தங்கத் தாலி மாயமானது தெரிய வந்தது. இது குறித்து, செல்வி அளித்த புகாரின்பேரில் ரேஸ் கோஸ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர். அதில், மருத்துவமனையில் ஊழியராகப் பணியாற்றி வரும் செல்வபுரம் அருகே உள்ள குமாரபாளையம் அமுல் நகரைச் சேர்ந்த ராஜசேகர் (35) என்பவர் உயிரிழந்த பெண்ணின் தாலியைத் திருடியது தெரியவந்தது. இதையடுத்து, போலீஸார் அவரைக் கைது செய்தனர்.

# கோவை விமானத்தில் பயணியிடம் துப்பாக்கி!

## போலீசார் கைப்பற்றி விசாரணை!!

கோவை,மே.28–
காஷ்மீரில் நடந்த தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து அனைத்து விமானநிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் அங்கு வரும் பயணிகள் விமான புறப்படும் நேரத்திற்கு முன்பாக விமான நிலையத்திற்கு வருவதற்கு பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. மேலும் அங்கு வரும் பயணிகளிடம் தீவிர சோதனைக்கு பின்னரே அனுமதிவழங்கிவருகின்றனர்.

இந்நிலையில் நேற்று கோவை விமான நிலையத்தில் இருந்து பெங்களூர் வழியாக டேராடூன் செல்லும் விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகளிடம் சி.ஆர்.பி.எப் வீரர்கள் தீவிர சோதனைகளை மேற்கொண்டனர். மேலும் அவர்கள் வைத்து இருந்த உடைமைகளும் சோதனை செய்யப்பட்டது. அப்போது பயணி ஒருவர் பையில் கை துப்பாக்கியும் தோட்டாவும் வைத்து இருந்தார். அதனை பறிமுதல் செய்த சி.ஆர்.பி.எப் வீரர்கள் அவரிடம் விசாரணை நடத்தினர்.

மேலும் இதுகுறித்து அவரிடம் நடத்திய விசாரணையில் கேரளா மாநிலம் திருச்சூரை சேர்ந்த பிரதீப் குமார் என்பதும், இவர் டேராடூனில் சி.ஆர்.பி.எப் வீரராக பணியாற்றி வருவது தெரியவந்தது. மேலும் சி.ஆர்.பி.எப் வீரர்கள் கை துப்பாக்கி மற்றும் தோட்டாவை பறிமுதல் செய்து அவரை கோவை பீளமேடு போலீசில் ஒப்படைத்தனர். அவரிடம் பீளமேடு போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். இந்த சம்பவத்தால் கோவை விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# சிறுமியை கர்ப்பமாக்கிய வாலிபருக்கு ஆயுள் சிறை!

## ஊட்டி கோர்ட்டு தீர்ப்பு!!

ஊட்டி, மே.28–
ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கர்ப்பம் ஆக்கிய வாலிபருக்கு ஆயுள்தண்டனைவிதித்து ஊட்டி மகிளா கோர்ட்டு தீர்ப்பளித்தது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள குருத்துக்குளி பகுதியை சேர்ந்தவர் பிரமோத் குட்டன் (23).

இவர் அதே பகுதியில் கூலித் தொழிலாளியாக பணியாற்றி வந்தார். இந்த நிலையில் கடந்த 2021ம் ஆண்டு இவருடைய பள்ளி தோழி ஒருவரின் மூலம்அவருடையதோழி இவருக்கு அறிமுகம் ஆகியுள்ளார்.

இதன் பின்னர் இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளது.

காதல் ஜோடி பல இடங்களுக்கும் சென்று தனிமையில் இருந்துள்ளனர். மேலும் செல்போன் மூலம் தங்கள் காதலை வளர்த்து வந்துள்ளனர். இதற்கிடையே 2020ம் ஆண்டு கொரோனா கால கட்டத்தில் பள்ளி கல்லூரிகள் இல்லாத நிலையில், பிரமோத் குட்டன் அந்த 17 வயது சிறுமியை ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவுக்கு அழைத்து சென்று திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்தார். இதில் அந்த சிறுமி கர்ப்பம் அடைந்துள்ளார். ஆனால் இது குறித்து அவர் யாரிடமும் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் 2021–ம் ஆண்டு அந்த சிறுமி கோவையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு பி.காம் சேர்ந்து படித்து வந்தார். அங்கு கல்லூரி விடுதியில் சிறுமிக்கு பெண் குழந்தை பிறந்து இறந்தது.

இதையடுத்து சிறுமி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலும் இது குறித்து சரவணம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் இந்த வழக்கு விசாரணை சம்பவம் நடந்த ஊட்டிக்கு மாற்றப்பட்டது.

இதுகுறித்த புகாரின் பதில் ஊட்டி மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் நித்யா தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து பிரமோத் குட்டனை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை ஊட்டி மகிளா கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இதில் குற்றம் சாட்டப்பட்ட பிரமோத் குட்டனுக்கு சாகும் வரை ஆயுள்தண்டனைவிதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு தரப்பில் ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் பி.செந்தில்குமார் ஆஜராகி வாதாடினார். இதைத்தொடர்ந்து பிரமோத் குட்டன் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



கோவை தொண்டாமுத்தூரில் விவசாயி வீட்டிற்குள் 5 அடி கண்ணாடி விரியன் பாம்பு புகுந்தது. இதனை தொண்டாமுத்தூர் சிறப்பு நிலைய அலுவலர் செல்வராஜ் மற்றும் பெருமாள்சாமி ஆகியோர் பிடித்தனர். அந்த பாம்பினை மாதம்பட்டி அருகே உள்ள நொய்யல் ஆற்றுப்பகுதியில் விட்டனர்.

### சாலையில் விழுந்த மரம்:

# வால்பாறையில் போக்குவரத்து பாதிப்பு!

வால்பாறை,மே.28–
வால்பாறையில் தொடரும் கனமழையால் மரம் முறிந்து விழுந்து போக்குவரத்து பாதிப்பட்டது. கோவை மாவட்டம் வால்பாறையில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து கனத்த மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

இதனால் வாழைதோட்டம் ஆறு, நடுமலை ஆறு உள்ளிட்ட ஆறுகளில் நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.



இந்நிலையில் இன்று காலையில் காற்றுடன் பெய்த கனமழையால் நடுமலை எஸ்டேட் பகுதியில் சாலையின் குறுக்கே மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தீயனைப்பு துறையினர் மரத்தை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர்.

மேலும் கடந்த மூன்று தினங்களாக வானிலை ஆய்வு மையம் ரெட் அலார்ட் கொடுத்திருந்த நிலையில் இன்று கன மழை பெய்யக்கூடும் என ஆரஞ்சு அலார்ட் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# கழிவுநீர் சாக்கடையில் பிணம்!

## கொலையா? போலீசார் விசாரணை!!

சரவணம்பட்டி,மே.28–
கழிவுநீர் சாக்கடையில் அடையாளம் தெரியாத சடலம் கிடந்தது. அவர் கொலை செய்யப்பட்டாரா என காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

கோவை சரவணம்பட்டி அடுத்த மணியகாரம்பாளையம் நல்லாம்பாளையம் சாலையில் உள்ள ஸ்ரீ பேரா நாயுடு சமித ஸ்ரீ ரங்கம்மாள் திருக்கோவில் உள்ளது. இதன் அருகே புதர்மண்டிய நிலையில் கழிவுநீர் சாக்கடை கால்வாய் உள்ளது . சத்தியமங்கலம் தாசம்பாளையம் பகுதியைச் சேர்ந்த பழனிசாமி(54) என்பவர் கோவிலின் பராமரிப்பாளராக உள்ளார் இந்நிலையில் கோயில் கழிவு நீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டது அதனை சரி செய்வதற்காக கோயிலின் அருகில் உள்ள புதர் நிறைந்த பகுதியின் இடையில் செல்லும் கழிவுநீர் கால்வாயில் சென்று பார்த்தபோது அங்கு இறந்து பத்து நாட்களுக்கு மேலான ஒரு ஆணின் சடலம் உள்ளதை கண்டு அதிர்ச்சி அடைந்தார் . இதனை தொடர்ந்து சரவணம்பட்டி காவல் துறையினருக்கு தகவல் அளித்ததை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல்துறையினர் சாக்கடையில் மிதந்த உடலை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர், மேலும் உடலை பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் .இதனைத் தொடர்ந்து இறந்த நபர் யார், அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர், கொலை செய்யப்பட்டாரா? என பல்வேறு கோணத்தில் காவல்துறையினர்வழக்குபதிவுசெய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

### கோவையில் கன மழை:

# பெட்ரோல் பங்க்கை வெள்ளம் சூழ்ந்தது!

கோவை,மே.28–
கோவையில் ஐந்தாவது நாளாக பெய்து வரும் மழையால் சாலைகள் சேரும், சகதியாக காணப்படுகிறது இதனால் வாகன போக்கு வரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது,

தென்மேற்கு பருவ மழை எதிரொலியாக கோவை,நீலகிரி மாவட்டங்களில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக விடிய விடிய மழை கொட்டி தீர்த்தது, இந்த மழை நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது,

தொடர் மழையால் கோவை மாநகர் பகுதியில் பல இடங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் அதற்காக சாலையில் தோண்டப்பட்ட இடங்கள் குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது மேலும் தார்சாலை அமைக்கப்படாததால் சாலைகள் சேறும் சகதியுமாக காணப்பட்டது.

இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதியடைந்தனர் இரண்டு சக்கர வாகனத்தில் சென்ற சிலர் சேறும் சகதியுமான சாலைகளில் தவறி விழுந்தனர்,

இதே போல் சத்தி சாலையில் அமைந்துள்ள மாருதி பெட்ரோல் பங்கே பைப் பதிப்புக்காக தோண்டப்பட்ட மண் மழையால் சாக்கடையைமூடியுள்ளது இதனால் மழை தண்ணீர் போக வழியில்லாமல் அருகேயிருந்த பெட்ரோல் பங்க் க்கு தண்ணீர் புகுந்தது, இதை பார்த்த பங்க் ஊழியர்கள் தண்ணீரை ஒரு வழியாக வெளியேற்றினர். மேலும் மண் சரிவால் சாலை ஓரத்தில் நின்றிருக்கும் மின்கம்பம் சாலையில் சாய்ந்து விழும் அபாய நிலையில் காணப்படுகிறது.

இதுபற்றி பங்க் நிர்வாகத்தினர் பலமுறை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் தொலைபேசியில் புகார் செய்தும் இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்க முன் வரவில்லை. சாக்கடை, மற்றும் மண் சரிந்து மழை தண்ணீர் போக வழியில்லாமல் இருப்பதையும் விரைவில் சரி செய்து கொடுக்க அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### கோபியில் பருவமழை:

# முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரம்!

கோபி,மே.28–
பருவமழை மற்றும் அதனால் ஏற்படும் வெள்ளபாதிப்புகளை எதிர்கொண்டு மீட்பு மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் மணல் மூட்டைகள், காற்றில் கீழே விழும் மரங்களை அகற்ற அறுவை இயந்திரங்கள், ஜே.சி.பி. இயந்திரங்கள், மற்றும் முன்களபணியாளர்களான சாலைப்பணியாளர்கள் மற்றும் சாலை ஆய்வாளர்களை கொண்டு குழு அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஈரோடு மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை கோபிசெட்டிபாளையம் பிரிவில்பராமரிக்கப்பட்டு வரும்மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மொத்தம் 201 கி.மீ சாலை உள்ளது.எதிர் வரும்பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் அனைத்து முன்னேற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது.

மேற்கண்ட சாலைகளில் மழைநீர் தேங்காமல் இருக்க அனைத்து சிறுபாலங்கள் மற்றும் பெரிய பாலங்களில் உள்ள அடைப்புகள், புதர்கள் அகற்றப்பட்டு வருகிறது.

மேலும், அதிக மழையினால் ஏற்படும் மண் அரிப்பு, மண்சரிவு, சாலை துண்டிப்புகளை உடனடியாக சரிசெய்து போக்குவரத்திற்குதடைகள் ஏற்படாமல் இருக்க போதிய முன்னேற்பாடுகள் அனைத்தும் செயலாக்கம் செய்யப்பட்டு ஆயத்த நிலையில் சாலைப்பணியாளர்கள் 36 பேர், சாலை ஆய்வாளர்கள் 4 பேர் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உதவிக் கோட்டப்பொறியாளர் மோகன்ராஜ், உதவிப்பொறியாளர் விஜய்கிருஷ்ணா ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

### பட்டா மாறுதலுக்கு

# ரூ.5 ஆயிரம் லஞ்சம்; நில அளவையர் கைது!

சேலம் மே 28
சேலத்தில் பட்டா மாறுதலுக்கு லஞ்சம் பெற்றதாக நில அளவையர் கைது செய்யப்பட்டார்.

சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவையாராக பணிபுரியும் சங்கர் என்பவர் புது ரோடு பகுதியை சேர்ந்த கண்ணன் என்பவரிடம் பட்டா மாறுதலுக்காக ஐந்தாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளார்

இது தொடர்பாக கண்ணன்லஞ்சஒழிப்புகாவல் துறையினருக்கு கொடுத்த புகாரின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்பு காவல் ஆய்வாளர் ரவிக்குமார் தலைமையிலான காவல் துறையினர் கண்ணனிடம் ஐந்தாயிரம் ரூபாய் ரசாயனம் தடவிய நோட்டுக்களை கொடுத்து அனுப்பினர்.

அப்போது சங்கர் சோழம்பள்ளம் பேருந்து நிலையம் அருகே லஞ்சப் பணம் பெற்றபோது மாறுவேடத்தில் இருந்த லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் சங்கரை கைது செய்தனர்.

# விஷம் குடித்த பேரூராட்சி தி.மு.க. கவுன்சிலர் சாவு!

கோபி, மே. 28–
கோபி அருகேள்ள காசிபாளையம் பேரூராட்சியில் 13–வது வார்டு கவுன்சிலராக (தி.மு.க.) இருந்து வந்தவர் செந்தில்குமார் (55). இவர் குடும்ப பிரச்னை காரணமாக கடந்த 20ம்தேதி விஷம் குடித் தார். ஆபத்தான நிலையில், கோபியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பின்னர், மேல்சிகிச்சைக் காக பெருந்துறை மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் சேர்க் கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் நேற்று இறந்தார். செந்தில்குமாருக்கு வாசுகி (49) என்ற மனைவியும், மணிகண்டன் (32) என்ற மகனும் உள்ளனர். கடத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

# கஞ்சா விற்ற 2 பேர் கைது!

கோவை,மே.28–
கோவை, காட்டூர் போலீசார் காந்திபுரம் பகுதியில் கஞ்சா விற்பனையை தடுக்க தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சக்தி கிராஸ் தெருவில் சந்தேகத்திற்கு இடமாக நின்ற வாலிபரை பிடித்து சோதனை செய்தபோது 200 கிராம் கஞ்சா இருந்தது.

இதைத் தொடர்ந்து கார்த்தி மாநகர் போலீஸ் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த வினோத் குமார் (28) என்ற வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

அதே போல செல்வபுரத்தில் போலீசார்ரோந்து சென்ற போது சிந்தாமணி ஏரி அருகில் பொதுக் கழிப்பிடம் அருகில் 150 கிராம் கஞ்சாவுடன் நின்ற செல்வபுரம், வீட்டு வசதி வாரிய குடியிருப்பத்தை சேர்ந்த மணிகண்டன் (41) என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து பணம் 2,600 கைப்பற்றப் பட்டது.

கைதான இருவரும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.



கோபியில் வெள்ளத்தடுப்பு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்தனர்.

### காரமடை அருகே

# சிறுவனை கடித்து குதறிய வளர்ப்பு நாய்!

மேட்டுப்பாளையம், மே.28–

காரமடை அருகே 12 வயது சிறுவனை வளர்ப்பு நாய் கடித்து அட்டகாசம் போலீசில் புகார் செய்யப்பட்டது.

காரமடை அருகே உள்ள பெள்ளாதி குரும்பபாளையம் பகுதியை சேர்ந்தவர் 12 வயது சிறுவன். இவர் தற்போது பள்ளி விடுமுறை என்பதால் வீட்டில் இருந்து வந்துள்ளார்.

இவரது வீட்டின் அருகில் தனியார் ஒருவர் நாய் ஒன்றினை வளர்த்து வருகிறார். இந்த நாய் சாலையில் வருவோர் மற்றும் போவோரை தொடர்ந்து துரத்தி வந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்து அச்சாலை வழியே செல்வதை தவிர்த்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று அப்பகுதியை சேர்ந்த 12 வயது சிறுவன் சாலையில் நடந்து சென்ற போது அந்த நாய் துரத்தியுள்ளது. இதனால் பயந்து போன சிறுவன் ஓட ஆரம்பிக்கவே அவனை துரத்தி சென்று கடித்துள்ளது. இதில் சிறுவனுக்கு கால் மற்றும் கைகளில் படுகாயம் ஏற்பட்டது.

உடனடியாக பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர் சிறுவனை மீட்டு காரமடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சிறுவனுக்கு முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் மேல் சிகிச்சைக்காக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சிறுவனைகடித்தநாயின் தொல்லை குறித்து பல முறை அதன் உரிமையாளரிடம் புகார் அளித்தும் கண்டுகொள்ளவில்லை என கூறப்படுகிறது. இந்த நிலையில் தான் சிறுவனை நாய் கடித்துள்ளது.

இதுகுறித்து சிறுவனின் பெற்றோர் ஆன்லைனில் போலீசில் புகார் அளித்துள்ளனர்.

இதுகுறித்து பேசிய சிறுவனின் பெற்றோர் தனியார் வளர்த்து வரும் நாய் தொடர்ந்து சாலைகளின் வழியே வருவோர் மற்றும் போவோரை துரத்தி அச்சுறுத்தி வருகிறது.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.



நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் பேரிடர் தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை பேரூராட்சி தலைவர் மரகதம் வீரபத்திரன் பார்வையிட்டார்.

# நரசிம்ம நாயக்கன்பாளையத்தில் பேரிடர் மீட்பு பணிகள் தீவிரம்!

பெ.நா.பாளையம், மே.28–

கோவை மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக புயல் காரணமாக பலத்த மழை பெய்து வருவதுடன் தென்மேற்கு பருவமழையும் தொடங்கியுள்ளது. இதனால் பலத்த காற்றும் வீச தொடங்கியுள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் உத்தரவுபடி பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் தயார் நிலையில் வைக்க தீயனைப்பு துறை, மின் துறை, பேரூராட்சி, ஊராட்சி நிர்வாகம் உட்பட அனைத்து நிர்வாகத்திடமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் பொருட்டு நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி மழை காற்றால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டாலும், மரம் விழுதல். மழைநீர் வீடுகளில் புகுந்தால் பாதிப்பு ஏற்பட்டவர்களை பாதுகாக்கவும் பேரிடர் காலத்தில் செயல்பாடு கவுண்சிலர்கள் அல் முன் எச்சரிக்கை நடவடிக்கை தயார் நிலையில் வைத்துள்ளது. இதற்காக நிவாரண பொருட்கள், மரம் அறுத்தல் மெஷின், மணல் மூட்டைகள், பேட்டரி, கயிறு, துப்புரவு பணிக்கும் நோய் பரவாமல் தடுக்க மருந்துகள் என பல்வேறு எச்சரிக்கை பொருட்களை தயார் நிலையில் வைத்துள்ளது. மேலும் சுகாதார பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவசங்களுடன் மீட்பு நடவடிக்கைகள் குறித்தும் செயல்படுவது குறித்தும் செயல் அலுவலர் ஆனந்தன் விளக்கம் அளித்தார். இதில் பேரூராட்சி தலைவர் மரகதம் வீரபத்திரன், நகர செயலாளர் கவுன்சிலர் ஸ்ரீதரன், துணைத்தலைவர் கவுன்சிலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மேட்டுப்பாளையத்தில்

# திருடன் என நினைத்து முதியவரை அடித்து கொன்ற வாலிபர் கைது!

மேட்டுப்பாளையம், மே.28–

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் திருடன் என நினைத்து முதியவரை அடித்து கொன்ற தோட்ட காவலாளி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகை செல்லும் சாலையில் கல்லாறு என்ற பகுதியில் அசோக் பார்ம் என்றழைக்கப்படும் பாக்கு தோப்பில் காவலாளியாக பணி புரிந்து வருபவர் பழனிசாமி.

இவர் தான் வேலை பார்க்கும் தோட்டத்தினுள் இரண்டு நபர்கள் நுழைந்து தன்னை மிரட்டி பணம் பிடுங்கிதோடு தாக்கினர் என்றும் திருப்பி தாக்கியதில் ஒருவர் இறந்து விட்டதாகவும் மற்றொருவர் தப்பி சென்று விட்டதாகவும் மேட்டுப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.



இதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் அங்கு இறந்து கிடந்த சுமார் ஏழுபது வயதுடைய முதியவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனை நடத்தியதோடு காவல் நிலைய ஆய்வாளர் சின்னகாமணன் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தினர்.

விசாரணையில் நேற்றிரவு (26–ம் தேதி) சுமார் பத்து மணியளவில் பழனிசாமி காவலுக்கு இருந்த தோட்ட பகுதிக்கு சுமார் ஏழுபது வயது மதிக்கதக்க முதியவர் ஒருவர் வந்துள்ளதும் அவரிடம் யார் என்று பழனிசாமி கேட்க அவர் நிற்காமல் சென்றதால் ஆத்திரமடைந்த பழனிசாமி அவரை இரும்பு கம்பியால் தலையில் தாக்கியதில் அவர் இறந்ததும் தெரிய வந்தது. இதனை மறைக்க பழனிசாமி திருடர்கள் வந்து பணம் பிடுங்கியதாகவும் தாக்கியதாகவும் திருப்பி தாக்கியதில் ஒருவர் இறந்து விட்டதாக கூறியது பொய் என தெரிய வந்தது.

இதனை பழனிசாமியும் ஒப்புக்கொண்டதை அடுத்து அவரை கைது செய்த மேட்டுப்பாளையம் காவல்துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி கோவை மத்திய சிறைக்கு அனுப்பி வைத்தனர்.

இறந்த முதியவர் கல்லாறு பகுதியில் பல மாதங்களாக யாசகம் கேட்டு வந்தவர் என்றும் இவரது ஊர் மற்றும் பெயர் தெரியாத நிலையில் இது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டாக்சி டிரைவர் தூக்கிட்டு சாவு!

கோவை, மே.28–

கோவை, சிங்காநல்லூர் அருகே உள்ள எஸ் எச்.எஸ் காலனி சங்கர் நகரை சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன். இவரது மகன் சுரேஷ்குமார் (38).

இவர் கால் டாக்ஸி டிரைவராக வேலை பார்த்து வந்தார்.

கடந்த 16ஆம் தேதி இவரது மனைவி மற்றும் குழந்தைகள் திருமணத்திற்காக நெல்லைக்கு சென்று விட்டனர். இந்த நிலையில் வீட்டில் சுரேஷ்குமார் மட்டும் தனியாக இருந்து உள்ளார்.

நேற்று காலை சுரேஷ்குமார் வீட்டில் இருந்து வெளியே வராததால் அவரது தாயார் தாமரைச்செல்வி தனது மகளுடன் சென்று பார்த்து உள்ளார். அப்போது வீட்டில் உள்ள இருந்து கம்பியில் சுரேஷ்குமார் தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாக கிடந்துள்ளார்.

இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த தாமரைச்செல்வி சிங்காநல்லூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

போலீசார் விரைந்து சென்று சுரேஷ்குமார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு கோவை இஎஸ்ஐ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர் தற்கொலை செய்து கொண்டது ஏன் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt.Ltd. from Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641 006. Tamil Nadu and printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641006, Tamil Nadu. Editor:S.N.Selvam. RNI Regn. No. TNTAM/2016/75063



கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண்.14–க்குட்பட்ட ஜி.என்.மில். அமர்ஜோதி நகர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்ற இடத்தினை மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டு அப்பகுதியில் புதிதாக தார்சாலை அமைக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# சிறப்பாக பணி மேற்கொண்ட தூய்மைப்பணியாளருக்கு பரிசு!

## ஆணையாளர் சிவகுருபிரபாகரன் வழங்கினார்!!

கோவை, மே.28

கோவை மாநகராட்சி 33–வது வார்டில் சிறப்பாக தூய்மைப்பணி மேற்கொண்ட பெண் தூய்மைப்பணியாளரை கூட்டுறவுசங்கங்களின் பதிவாளர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர் சால்வை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கிப் பாராட்டினர்.

கோவை மாநகராட்சி ஐந்து மண்டலங்களுக்குட்பட்ட 100 வார்டுகளில் மக்களிடம் இருந்து வீடுகள் தோறும் மாநகராட்சியின் தூய்மைப்பணியாளர்கள் மூலமாக மக்கும் குப்பை, மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து குப்பைகள் பெறப்பட்டு வருகின்றன,

அந்த வகையில் மத்திய மண்டலத்துக்கு உள்பட்ட 33 வது வார்டு சங்கனூர், தயிர்இட்டேரிசாலை குடியிருப்புப் பகுதியில் தூய்மைப்பணியாளராகப்பணியாற்றும் கே.ரேவதி, மக்களிடம் இருந்து மக்கும் குப்பைகளை தரம் பிரித்து பெறும் பணியில் சிறப்பாக ஈடுபட்டு வந்ததை நேற்று நேரில் பார்த்த் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன் ஆகியோர் அவரை மநகராட்சி அலுவலகத்துக்கு நேரில் அழைத்து சால்வை அணிவித்தும், நினைப்பரிசுகள் வழங்கியும் பாராட்டினர்.

இந்த நிகழ்ச்சியில் துணை ஆணையாளர்கள் அ.சுல்தாவா, த.குமரேசன், தலைமைப் பொறியாளர்விஜயகுமார், உதவி ஆணையாளர்கள் செந்தில்குஅமரன், துரை முருகன், மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், சுகாதார ஆய்வாளர் சரவணக்குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### கோவை சரவணம்பட்டியில்

# உதவி கேட்பது போல் வந்து திருடிய வடமாநில பெண்கள்!

## காவல்துறையினர் விசாரணை!!

சரவணம்பட்டி, மே.28–

கோவை சரவணம்பட்டி காவல் நிலையத்துக்கு உட்பட்ட கணபதி அத்திபாளையம் பிரிவு பகுதியில் தனியாருக்குச் சொந்தமான பம்ப் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் உதவி கேட்பது போல் 7 வடமாநில பெண்கள் வந்துள்ளனர். நிறுவனத்திற்குள் புகுந்த அவர்களை பம்ப் நிறுவனத்தில் உள்ள ஊழியர்கள் வெளியே அனுப்பியுள்ளனர். அதனைத்தொடர்ந்து நிறுவனத்தின் முன் அறையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1½ லட்சம் மதிப்புள்ள காப்பர் ஒயர் மற்றும் பித்தளை உலோகங்களை காணவில்லை இதனைத் தொடர்ந்து நிறுவன ஊழியர்கள் உடனடியாக அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்தபோது உதவி கேட்பது போல் வந்த வடமாநில பெண்கள் இருவர்



அறையினுள் சென்று தாங்கள் கொண்டு வந்திருந்த துணியில் மறைத்து வைத்து கனமான பொருட்களை திருடிச் சென்றது தெரியவந்தது.

இதுகுறித்து பம்ப் நிறுவன உரிமையாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில் சரவணம்பட்டி காவல்துறையினர் நிறுவனத்திற்கு வந்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இதுபோன்று சந்தேகப்படும்படியான வகையில் யாரேனும் சுற்றி திரிந்தால் போலீசாருக்கு தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தினர்.

# கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆய்வு!

கோவை, மே.28–

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம், கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கூட்டுறவு சிறப்பங்காடி, துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆர்.எஸ்.புரம் கிளை, கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு அச்சுக்கூடம் மற்றும் கோயம்புத்தூர் நகர கூட்டுறவு வங்கி தலைமையகம் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், கோவை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அ.அழகிரி, துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தின் இணைப் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் ஆ.பழனிசாமி ஆகியோர் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் வரவேற்றனர்.

கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி, நிதி நிலை மற்றும் அரசு திட்டங்கள் செயல்படுத்துவது குறித்து எடுத்தரைக்கப்பட்டது.

சிந்தாமணி வளாகத்தில் அமைந்துள்ள மருந்து கிடங்கு, மளிகை கிட்டங்கி, சுயசேவை பிரிவு, கூட்டுறவு மருந்தகம் ஆகிய பிரிவுகளிலும் ஆய்வு மேற்கொண்டார்.

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தின் உற்பத்திப் பிரிவுகளான உரப்பிரிவு, பூச்சிக்கொல்லி மருந்துப்பிரிவு, வேளாண் உபகரணப்பிரிவு, விதைநெல் உற்பத்திப்பிரிவு மற்றும் இதர வியாபாரப்பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை பார்வையிட்டு அதன் வியாபார வளர்ச்சிக்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார். இதில் கூட்டுறவு துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# நீலகிரி மாவட்டத்தில் மழைக்கு 17 வீடுகள் சேதம்!

## ஆ.ராசா எம்.பி. தகவல்!!

ஊட்டி, மே.28–

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பலத்த காற்றுடன் கூடிய கனமழையால் பாதிக்கப்பட்ட இத்தலார், பெம்மட்டி, இடங்களை அதிகாரிகளுடன் ஆய்வு செய்தப்பின் ஆ.ராசா எம்.பி. செய்தியாளர்களிடம் கூறும் போது

இதுவரை 17 வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ள தாகவும், 283 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்டவை செய்து தரப்பட்டுள்ளதாகவும், பலத்த காற்றின் காரணமாக மின் விநியோகம் மற்றும் குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ள நிலையில் இன்று இரவு 10 மணிக்குள் அனைத்தும் சீரமைக்கப்படும் எனவும், வனப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு மின் விநியோகம் விரைவில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தேவையான பணியாளர்கள் உள்ள நிலையில் சீரமைப்பு பணியில் ஈடுபட்டு வருவதாகவும். நீலகிரி மாவட்டத்தில் அபாயகரமான மரங்களை கண்டறிந்து விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### கோவை, ஈரோடு, திருப்பூர் உள்பட

# 14 மருந்தகங்களில் அனுமதி இன்றி மாத்திரைகள் விற்பனை!

## 6 கடைகளில் உரிமம் தற்காலிகமாக ரத்து!!

சென்னை, மே.28–

வல்லூறுகள் உயிரிழப்புக்கு காரணமாக உள்ள நிமெசலைட் மருந்து தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அதனை தமிழகத்தில் சட்டவிரோதமாக விற்பனை செய்த 8 மருந்தகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் இரு மருந்தகங்களின் உரிமம் நிரந்தரமாகவும், 6 மருந்தகங்களின் உரிமம் இடைக்காலமாகவும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கால்வலி, மூட்டு வலி, காது மூக்கு தொண்டை வலி, தீவிர காய்ச்சல் மற்றும் உடல் வலிக்கு நிமெசலைட் மருந்து பயன்படுத்தப்படுகிறது. மனிதர்களுக்கு வழங்கப்படும் சில வகை மருந்துகள், விலங்குகளுக்கும் தேவையின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது. அதன்படி, டைக்ளோபினாக், கீட்டோபிரோபின், அசிக்லோபெனாக், நிமெசலைட் ஆகிய மருந்துகள் கால்நடைகளுக்கு வலி நிவாரணி, அழற்சி எதிர்ப்பு மருந்தாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படும் விலங்குகள் உயிரிழக்கும்போது, அந்த உடலை உண்ணும் கழுகு, வல்லூறு போன்ற பறவைகள் பாதிப்புக்குள்ளாகி இறக்க நேரிடுகிறது. இதனால், வனப்பகுதியில் அவற்றின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும், உயிர்ச் சங்கிலி பாதிக்கப்படுவதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன. இதையடுத்து அந்த நான்கு மருந்துகளையும் கால்நடைகளுக்கு வழங்க மத்திய அரசு தடைவிதித்துள்ளது. அதன் விற்பனை, சட்டவிரோத உற்பத்தியை கண்காணித்து நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழகத்திலும் மாநில மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் தொடர் ஆய்வுகளை நடத்தி விதிகளுக்கு புறம்பாக செயல்படுவோர் மீது நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில் 14 மருந்தகங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக மருந்து கட்டுப்பாட்டு துறை துணை இயக்குநர் ஸ்ரீதர் கூறியதாவது: கால்நடை மருத்துவ சிகிச்சையில் தடை விதிக்கப்பட்ட மருந்துகளை விற்பனை செய்வோரின் பதிவு உரிமத்தை ரத்து செய்ய விதிகள் உள்ளன. அந்தவகையில், சென்னை, கோவை, ஈரோடு, வேலூர், திருப்பூர், ஈரோடு, செங்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 14 மருந்தகங்களில் நிமெசலைட் மருந்துகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டது. இதையடுத்து இரு மருந்தகங்களின் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, கோவை, திருவள்ளூரில் தலா 2 மருந்தகங்களின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள மருந்த கங்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றார்.

### பவானி அருகே

# வாக்கிங் சென்ற பேராசிரியர் பைக் மோதி பலி!

பவானி, மே.28–

ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள காளிங்கராயன் பாளையம் லட்சுமி நகரை சேர்ந்த ஸ்ரீரங்கன் மகன் ஈஸ்வரன் (50) இவர் நேற்று காலை வாக்கிங் புறவழிச்சாலை வழியாக நடந்து சென்றார். இவர் மீது வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. நிலைத்தடுமாறிய கீழே விழுந்து ஈஸ்வரனுக்கு படுகாயம் அடைந்த அக்கம் பக்கம் இருந்தவர்கள் ஈஸ்வரனை பவானி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேல் சிகிச்சைக்காக சேலம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்தார். இதைக் குறித்து சித்தோடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




**Semac Construction Limited**

(Formerly Known as Semac Consultants Limited)

Registered Office: Pollachi Road, Malumachampatti Post,Coimbatore - 641 050. Phone: +91-4226655111

CIN:L42900TZ1977PLC000780

**STATEMENT OF AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED MARCH 31, 2025** (Rs. In Lakhs except per share data)

| Sl. No. | Particulars | STANDALONE | | | | | CONSOLIDATED | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter Ended | | | Year Ended | | Quarter Ended | | | Year Ended | |
| | | 31st March 2025 (Audited) | 31st Dec 2024 (Unaudited) | 31st March 2024 (Audited) | 31st March 2025 (Audited) | 31st March 2024 (Audited) | 31st March 2025 (Audited) | 31st Dec 2024 (Unaudited) | 31st March 2024 (Audited) | 31st March 2025 (Audited) | 31st March 2024 (Audited) |
| 1 | Total Income from Operations (net) | 7,047.13 | 4,212.91 | 2,076.85 | 15,854.96 | 11,051.23 | 7,529.80 | 4,681.30 | 2,597.19 | 17,703.06 | 13,303.33 |
| 2 | Net Profit/(Loss) for the period before tax | (42.05) | (270.31) | (1,205.78) | (789.18) | (3,464.90) | (104.88) | (233.10) | (1,189.67) | (735.28) | (3,273.37) |
| 3 | Net Profit/(Loss) for the period after tax | 139.60 | (152.88) | (1,597.90) | (611.53) | (3,315.74) | 73.30 | (124.09) | (1,604.16) | (584.00) | (3,188.72) |
| 4 | Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the period (after tax) and other Comprehensive Income (after tax) | 135.64 | (134.51) | (1,607.24) | (605.77) | (3,322.06) | 68.80 | (74.68) | (1,629.31) | (520.60) | (3,244.02) |
| 5 | Equity Share Capital | 311.73 | 311.73 | 311.73 | 311.73 | 311.73 | 311.73 | 311.73 | 311.73 | 311.73 | 311.73 |
| 6 | Reserves (excluding Revaluation Reserve)as shown in the Audited Balance Sheet of the previous year | | | | 6,077.28 | 6683.06 | | | | 7,075.55 | 7624.88 |
| 7 | Earnings per equity share - Basic | 4.48 | (4.90) | (51.26) | (19.62) | (106.37) | 2.35 | (3.98) | (51.46) | (18.73) | (102.29) |
| 8 | Earnings per equity share - Diluted | 4.48 | (4.90) | (51.26) | (19.62) | (106.37) | 2.35 | (3.98) | (51.46) | (18.73) | (102.29) |

**Note:**

1) The above is an extract of the detailed format of Quarter and year ended Financials Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations,2015. The detailed audited financial results and this extract were reviewed and recommended by the Audit committee and Approved by the Board of Directors of the company at their respective meeting held on May 27th, 2025. The full format of the Quarter and year ended Financial Results are available on the websites of the Stock Exchanges www.nseindia.com and www.bseindia .com and in company's website https://semacconstruction.com.

2) The audited financial results, for the quarter and year ended March 31, 2025 have been reviewed by the Statuary Auditor who have expressed an unmodified opinion on the audited Financials Results.

Date : 27th May 2025

Place : Gurugram

for and on behalf of the Board

**Abhishek Dalmia**

Executive Chairman

DIN: 00011958

# கச்சத்தீவை மீட்பதுதான்...

1—ம் பக்கத் தொடர்ச்சி

தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். கச்சத்தீவை மீட்பதுதான் தமிழ்நாட்டு மீனவர்களின் இன்னல்களுக்கு அது நிரந்தர தீர்வாக அமையும்.

கடந்த நான்காண்டுகளில், 97 நிகழ்வுகளில், 185 படகுகளும், ஆயிரத்து 383 மீனவர்களும், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும்; படகுகளை மீட்க வேண்டும் என்று இந்தியப் பிரதமருக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும், இதுவரைக்கும் எத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன் என்று சொன்னால், 76 கடிதங்களை நான் எழுதியிருக்கிறேன். அது மட்டுமல்ல,

நேரில் சந்திக்கும் போதெல்லாம் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், கூட்டணி எம்.பி.,களும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி உரிமைக்குரலை எழுப்பிய காரணத்தால்தான், இதுவரைக்கும் ஆயிரத்து 354 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். எஞ்சிய 29 மீனவர்களையும் மீட்டு, தாயகம் அழைத்துகொண்டு வருவதற்கான தொடர் நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்! இந்த நிலையிலும், 2018—ஆம் ஆண்டு முதல் சிறைபிடித்த 229 படகுகளை இலங்கை அரசு இதுவரைக்கும் விடுவிக்கவில்லை. ஒரு பக்கம் அவற்றை மீட்பதற்கான அரசியல் போராட்டத்தை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தாலும், இதனால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்று மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை சேர்ந்த 129 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் வீதமும், 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீதமும் என்று 6 கோடியே 84 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். இந்தத் தொகையை 6 லட்சம் ரூபாயாக முதலில் உயர்த்தி, இப்போது 8 லட்சம்ரூபாயாகஉயர்த்தி அறிவித்திருக்கிறேன்.

இப்படி, மீனவர்களின் கண்ணீரைத் துடைக்கும் அரசாக ஆதரவுக்கரம் நீட்டக்கூடிய அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு இருந்து கொண்டிருக்கிறது. இந்த இன்னல்கள் எல்லாம் தீர கச்சத்தீவை மீட்பதுதான் ஒரே வழி! மீனவர்களின்நலன் காக்க நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கக்கூடிய திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் பட்டியலிட்டு சொல்ல வேண்டும் என்றால், மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவித் தொகை 5 ஆயிரம் ரூபாயில் இருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின்கீழ், 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

மீனவர்கள் துயரங்களை எதிர்கொள்ளும் தருணங்களில் உங்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதில் முனைப்போடு இன்றைக்கு திராவிட மாடல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# "யார் அந்த சார்" என்ற கேள்வி...

1—ம் பக்கத் தொடர்ச்சி

அமர்ந்து பிரியாணி சாப்பிடும் அளவிற்கு நெருக்கமாக இருந்த ஸ்டாலின் அரசின் அமைச்சர் மற்றும் சென்னைதுணைமேயர் இந்த வழக்கில் விசாரிக்கப்படாததுஏன்? சிறப்பு புலனாய்வு பிரிவில் பணியாற்றிய டி.எஸ்.பி. ராகவேந்திரா ரவி ராஜினாமா செய்தது ஏன்? உயர் அதிகாரிகள் அழுத்தம் என்று வந்த செய்திகளுக்கு என்ன விளக்கம்?

இவை எல்லாவற்றையும் விட மிக மிக முக்கியமான, இந்த வழக்கின் மூலக் கேள்வியான #யார்_அந்த_சார் ? என்ற கேள்வி, இன்னும் அப்படியே இருக்கிறது!

வழக்குவிசாரணையின் முதற்கட்டம்முடிவதற்குள்ளேயே, ஞானசேகரன் தவிர இந்த வழக்கில் யாரும் குற்றவாளி இல்லை என்று எதற்காக ஸ்டாலின் அரசின் காவல்துறை அவசர அவசரமாக பிரஸ் மீட் கொடுக்க வேண்டும்?

யாரைக் காப்பாற்ற இந்த வேகம்?

பாதி நீதியால் தப்பித்துவிடலாம் என்று எண்ணினால், அந்த எண்ணம் ஒருபோதும் ஈடேறாது.

காலம் மாறும் ! காட்சிகள் மாறும் !

விரைவில் அ.தி.மு.க. ஆட்சி அமையும்.

அந்த சார் "யாராக இருந்தாலும்", கூண்டேற்றப்படுவார். சாரைக் காக்கும் சார்களையும் உடன் ஏற்றி, அவர்களும் நாட்டுக்கு அடையாளம் காட்டப்படுவர். #யார்_அந்த_சார் #சாரை_காப்பாற்றியது_யார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தி.மு.க. வேட்பாளர்கள்...

1—ம் பக்கத் தொடர்ச்சி

இந்த 6 இடங்களுக்குத்தான் இப்போது தேர்தல் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் ஜூன் 2 ஆம் தேதி தொடங்குகிறது. வேட்புமனுவை திரும்ப பெற ஜூன் 12 ஆம் தேதி கடைசி நாளாகும். சட்டப்பேரவை வளாகத்தில் அமைக்கப்படும் வாக்குச்சாவடியில் ஜூன் 19 ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். மாலை 5 மணிக்கே வாக்குகள் எண்ணப்பட்டு அன்றே முடிவு அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து காலியாகும் மாநிலங்களவை இடங்களுக்கு திமுக கூட்டணி சார்பில் 4 வேட்பாளர்களும், அதிமுக கூட்டணி சார்பில் 2 வேட்பாளர்களும் போட்டியிட உள்ளனர். திமுக கூட்டணி வேட்பாளர்கள் 4 பேர் எளிதாக வெற்றி பெறுவார்கள். போட்டி இருந்தால் தேர்தல் நடத்தப்படும்

இந்த நிலையில் 6 இடங்களில் யார் போட்டியிடுவார்கள் என எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இதற்கிடையே திமுக சார்பில் நான்கு இடங்களில் போட்டியிடும் வேட்பாளர்களை திமுக இன்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள அறிவிப்பில் 2025 ஜூன் 19 அன்று நடைபெறவிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் நான்கு இடங்களில், மூன்று இடங்களுக்கு தி.மு.க. வேட்பாளர்களும், மற்றுமுள்ள ஒரு இடத்திற்கு ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக வேட்பளாராக பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் கவிஞர் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு இடம் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனுக்கு தரப்படுகிறது. இதற்கிடையே இன்று நடைபெற்ற மக்கள் நீதி மையம் நிர்வாகக் குழு, செயற்குழு கூட்டம் இன்று நடந்தது. அதன் அடிப்படையில், வருகிற ஜூன் 19 ஆம் தேதி நடைபெற இருக்கும் 6 தமிழக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளராக, தலைவர். கமல்ஹாசனை மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாகக் குழு, செயற்குழு ஏகமனதாக முடிவு செய்து அறிவிக்கப்பட்டது.

அதேபோல் இப்போது மாநிலங்களவை எம்பியாக உள்ள வில்சனுக்கு மீண்டும் எம்பி பதவி வழங்கப்பட்டுள்ளது. திமுக அரசுக்கு எதிரான பல வழக்குகளில் சாதகமான தீர்ப்பைப் பெற சட்டரீதியாக போராடுவதில் சிறந்த முறையில் செயல்பட்டதால் இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் .சிறுபாண்மையினருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இப்போது கவிஞர் சல்மாவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. திமுக ஆதரவுடன் மாநிலங்களவை எம்பியாக உள்ள மதிமுக பொதுச் செயலாளர் வைகோவுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதேபோல சண்முகத்துக்கும் வாய்ப்பு இல்லை .

திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சல்மா கவிஞர் ஆவார் . இவர் திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் பிறந்தவர் . இவர் பல கவிதை நூல்களை எழுதியுள்ளார். இவருக்கு திருமணமாகி விட்டது.சலீம்ஜாபர்,முஹம்மது நதீம் என இரண்டு மகன்கள் உள்ளனர். சல்மா பொன்னாம்பட்டி பேரூராட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். 2006ல் மருங்காபுரி தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். பின்னர், தமிழ்நாடு சமூகநல வாரிய தலைவியாக நியமனம் செய்யப்பட்டார். தற்போது தி.மு.க.வில் மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளராகப் பணியாற்றி வருகிறார். என்பது குறிப்பிடதக்கது.எஸ். ஆர். சிவலிங்கம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆவார்.

இவர் 1989 மற்றும் 1996 தேர்தல்களில் சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# சப்—இன்ஸ்பெக்டரின்...

1—ம் பக்கத் தொடர்ச்சி

சாலை அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது.

இதில் காரில் பயணித்த டிரைவர் அருணை தவிர மீதமுள்ள நான்கு பேரும் படுகாயங்களுடன் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு மீட்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனைக்குச் சென்ற போது ஜெயா ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினர். படுகாயங்களுடன் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக மூன்று பேரும் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு ஜெயாவின் மகன் கௌதமும் இறந்துவிட்டார். அபர்ணா மற்றும் தனலட்சுமி ஆகியோர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருந்து வருகின்றனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், மகன் இருவர் பலியாகிய சம்பவம் உறவினர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்து குறித்து சின்னமனூர் காவல் ஆய்வாளர் சேது பாலாண்டி விசாரணை செய்து வருகிறார்.



சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் இன்று ஜல்லிக்கட்டு நடந்தது. வாடிவாசலில் இருந்து சீறி வந்த காளையை படத்தில் காணலாம்.

## துப்பாக்கியை காட்டி மிரட்டி

# வெடிமருந்து லாரியை கடத்திய நக்சலைட்டுகள்!

## * போலீசாருக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதல் நடத்த திட்டமா?

## * ஒடிசாவில் பரபரப்பு சம்பவம்!!

புவனேஸ்வர், மே.28— ஒடிசாவில் மாவோயிஸ்ட்கள் மீண்டும் கைவரிசை காட்டியுள்ளனர். துப்பாக்கி முனையில் லாரியை காட்டு பகுதிக்கு கடத்திச் சென்று வெடிபொருட்களை மாவோயிஸ்ட்கள் அள்ளிச்சென்று விட்டனர். இந்த சம்பவம் ஒடிசாவில் மட்டுமல்லாமல் அண்டை மாநிலமான ஜார்க்கண்டிலும் பரபரப்பை உச்சப்படுத்தியுள்ளது. காவல் துறைக்கு எதிராக மிகப் பெரிய அதிரடி தாக்குதலை நடத்த மாவோயிஸ்ட்கள் திட்டமிட்டுள்ளனரா என்ற கேள்வி ஒடிசா, ஜார்கண்ட், மகாராஷ்ட்டிரா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களை உலுக்கி வருகிறது.

1960 —களில் ஆதிக்கவாதிகளின் சுரண்டலுக்கு எதிராக மேற்கு வங்காளத்தில் உள்ள நக்சல்பாரி என்ற இடத்தில் மாவோயிஸ்ட்கள் அதிரடி தாக்குதல் நடத்தினார்கள். இதன் அடிப்படையில் தான் நக்சல்கள் என்று மாவோயிஸ்ட்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

அடர்ந்த காட்டு பகுதியில் மாவோயிஸ்ட்கள் பதுங்கி உள்ளனர். அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். மாவோயிஸ்ட்களுக்கு எதிரான வேட்டையை மத்திய அரசு தீவிரப் படுத்தியுள்ளது. வருகிற மார்ச் மாதத்திற்குள் மாவோயிஸ்ட்கள் முற்றிலுமாக ஒழிக்கப்படுவார்கள் என்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தெரிவித்துள்ளார். சமீபத்தில் மாவோயிஸ்ட்கள் இயக்கத்தின் முக்கிய தளபதியான பசவராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அடுத்தடுத்து நடைபெற்ற எண்கவுண்டர்களில் சுமார் அரை சதம் மாவோயிஸ்ட்கள் தீர்த்துக் கட்டப்பட்டுவிட்டனர்.

மாவோயிஸ்ட்களை அரசு வேட்டையாடி வருகிறது. இதற்கு மாவோயிஸ்ட்களும் எதிர்வினையாற்றி வருகிறார்கள். ஒடிசாவில் உள்ள சுந்தர்கார் மாவட்டம், அண்டை மாநிலமான ஜார்க்கண்டை ஒட்டியுள்ளது.

இந்த அடர்ந்த காட்டுப் பகுதிகளில் ஏராளமான மாவோயிஸ்ட்கள் பதுங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

பலாங் போலீஸ் சரகத்துக்கு உள்பட்ட பாங்கோ பகுதியில் வெடிபொருட்களை ஏற்றி கொண்டு ஒரு லாரி வேகமாக சென்று கொண்டிருந்தது. துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை ஏந்திய சுமார் 10 மர்ம நபர்கள் மிரட்டல் விடுத்தனர். லாரியை ஒரு மைல் தூரத்துக்கு கடத்திச் சென்றனர். லாரியில் இருந்த, சர்வதேசத் தரத்திலான 150 ஜெலட்டின் குச்சிகள் அடங்கிய சிப்பங்களை மர்ம நபர்கள் அள்ளிச் சென்றனர்.

மின்னல் வேகத்தில் அடர்ந்த காட்டுக்குள் ஓடிச் சென்று மறைந்து விட்டனர். இந்நிகழ்வு பரபரப்பை உச்சப்படுத்தியுள்ளது. இந்த ஜெலட்டின் குச்சிகள் கனிம சுரங்கம் தோண்டுவதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வெடிபொருட்களை அபகரித்துச் சென்றவர்கள் மாவோயிஸ்ட்கள் தான் என்று சந்தேகிப்பதாக சுந்தர்கார் எஸ்.பி. பிரதியுஷ் திவாகர் தெரிவித்துள்ளார். வெடிபொருட்களை அபகரித்த சம்பவம் ஒடிசாவில் மட்டுமல்லாமல் அண்டை மாநிலமான ஜார்க்கண்டிலும் பரபரப்பை விஸ்வரூபப்படுத்தியுள்ளது.

காவல் துறைக்கு எதிராக மிகப் பெரிய அதிரடி தாக்குதலை நடத்த மாவோயிஸ்ட்கள் திட்டம் இட்டுள்ளனரா என்ற கேள்வி ஒடிசா, ஜார்க்கண்ட், மகாராஷ்ட்டிரா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களை உலுக்கி வருகிறது. இந்த மாநிலங்களில் மாவோயிஸ்ட்கள் வேட்டையை தீவிரப் படுத்த அரசு முயற்சி முன்னெடுப்பு மேற்கொண்டுள்ளது.

# மாணவி கற்பழிப்பு வழக்கில்...

1—ம் பக்கத் தொடர்ச்சி

நுட்ப சட்டம், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் மற்றும் பி.என்.எஸ்.எஸ் சட்டத்தின் 12 பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்யபட்டது.

இதனையடுத்து சென்னை மகளிர் நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் 23 —ஆம் தேதி முதல் சாட்சிகள் விசாரணை தொடங்கியது. தினந்தோறும் சாட்சி விசாரணை நடத்தப்பட்டது. வழக்கில் காவல் துறை தரப்பில் 29 சாட்சிகள் நேரில் ஆஜராகி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் காவல்துறை தரப்பில் சுமார் 75 சான்று ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டது.

கடந்த 20 —ஆம் தேதி வழக்கின், அனைத்து சாட்சி விசாரணை மற்றும் குறுக்கு விசாரணைகளும் நிறைவடைந்த பின்னர் இரு தரப்பினரும் இறுதி வாதங்களை முன்வைத்தனர். அதில் காவல்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எம்.பி.மேரி ஜெயந்தி, குற்றஞ்சாட்டப்பட்ட ஞானசேகரனுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அறிவியல் ரீதியான ஆதாரங்கள் உள்ளது என வாதிட்டார். இவர் தான் குற்றம் புரிந்து உள்ளார் எனவே அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என வாதிட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஞானசேகரன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், சந்தேகத்தின் அடிப்படையில்மட்டுமேகாவல் துறைஇந்தவழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரம் இல்லை. எனவேவழக்கில்இருந்து விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

இரு தரப்பு இறுதி வாதங்கள் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கில் மே 28—ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என சென்னை மகளிர் நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி ராஜலட்சுமி முன்பு தீர்ப்புக்காக குற்றம் சாட்டப்பட்ட ஞானசேகரன் இன்று காலை 10.30 மணிக்கு ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ஞானசேகரனிடம், குற்றத்தை ஏற்கிறீர்களா? என நீதிபதி கேள்வி எழுப்பினார். அதற்கு ஞானசேகரன், அப்பா இறந்துவிட்டதால் தாயை பராமரிக்க வேண்டும் என்பதால், குறைந்தபட்சதண்டனை வழங்க வேண்டும். தனக்கு 8—ஆம் வகுப்பு படிக்கும்பெண்குழந்தை இருப்பதாகவும், நீதிமன்றம் கருணை காட்ட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்,

அரதிலும் அரிதான இந்த வழக்கில் ஞானசேகரனுக்கு அதிகபட்சதண்டனை விதிக்க வேண்டும்.குற்றவாளிக்கு எந்த கருணையும், இரக்கமும் காட்ட கூடாது. அதிகபட்ச தண்டனையாக ஆயுள்தண்டனைவிதிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதையடுத்து,தீர்ப்பை அறிவித்த நீதிபதி, ஞானசேகரனுக்கு எதிரான 11 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி என அறிவித்தார்.

மேலும், தண்டனை விவரத்தை அறிவிப்பதற்காக வழக்கை வருகிற ஜூன் 2—ஆம் தேதிக்கு தீர்ப்பை தள்ளிவைத்தார்.



புஞ்சைபுளியம்பட்டி பண்ணாரி மாரியம்மன் கோவில் உண்டியல் திறந்து எண்ணப்பட்டன. அப்போது ரொக்கம், தங்கம் 361 கிராம் மற்றும் வெள்ளி 2,099 கிராம் இருந்தன.

மாலை முரசு
முரசம்
கோவை
28-5-2025

# குடிமைப் பணித் தேர்வு சான்றிதழ்: வழங்குவதில் தாமதம் கூடாது!

அண்மையில் இந்திய குடிமைப் பணித்தேர்வு 2024—ஆம் ஆண்டுக்கான முடிவுகள் வெளிவந்தன. சுமார் 1056 பணியிடங்களுக்கான தேர்வாக அது நடந்தது. முதல் நிலை, முதன்மை மற்றும் நேர்முகத் தேர்வு என மூன்று நிலைகளைக் கொண்டது அத்தேர்வு. இறுதி முடிவுகளின்படி தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏறத்தாழ 57 தேர்வர்கள் வெற்றி பெற்றனர். இது சுமார் 5.3 சதவீதம் ஆகும். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழ்நாட்டின் தேர்ச்சி விகிதம் சற்றேறக்குறைய 10 சதவீதம் முதல் 13 சதவீதம் வரை இருந்து வந்தது. பாடத்திட்டம் மாற்றம், தேர்வு முறையில் மாற்றம் போன்ற புதிய சூழலில் தமிழ்நாட்டின் தேர்ச்சி என்பது 3 சதவீதம் முதல் 4 சதவீதம் சரிந்தது. தற்போது 5.3 சதவீதமாக சற்றே உயர்ந்து மாற்றம் கண்டுள்ளது.

முன்பு இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெறுகின்ற முதல் 100 தேர்வர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 முதல் 15 தேர்வர்கள் வரை இருப்பார்கள். தற்போது 2 அல்லது 3 தேர்வர்களே இருக்கிறார்கள். தரநிலை பின்னடைவால் 400 ஆவது இடம்பெற்று வெற்றி பெறுபவருக்குகூட ஐஏஎஸ் பணி வாய்ப்பும், 700 ஆவது இடம் பெற்று வெற்றி பெறுபவருக்கு ஐபிஎஸ் பணி வாய்ப்பும் தமிழ்நாடு ஒதுக்கீடும் கிடைக்கிறது. இது மகிழ்ச்சியோ, நல்ல மாற்றமோ அல்ல. இது நாம் தரநிலையில் பின்தங்கியுள்ளதை அறிவிக்கும் ஓர் எச்சரிக்கை மணி ஆகும். தமிழ்நாட்டின் தேர்ச்சி விகிதம் இன்னும் உயர வேண்டிய சூழலில், தர நிலையிலும் உயர்ந்து வரவேண்டும் என்பதையும் இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஏனெனில், 2007—ஆம் ஆண்டு குடிமைப் பணித் தேர்வில் அகில இந்திய அளவில் 31ஆம் இடம் பெற்று ஐஏஎஸ் பணி ஒதுக்கீடு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர் பா. ராஜேந்திர சோழனுக்கு தமிழ்நாடு ஒதுக்கீடு கிடைக்கவில்லை. அதேபோல 2013—ஆம் ஆண்டு அகில இந்திய அளவில் 33 ஆம் இடம்பெற்று ஐஏஎஸ் பணி வாய்ப்புப்பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர் கி. விஜயாவுக்கு தமிழ்நாடு ஒதுக்கீடு கிடைக்கவில்லை. காரணம், தரநிலையில் அவர்களுக்கு முன்னால் தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 முதல் 5 தேர்வர்கள் இருந்தனர் என்பதைக் கவனத்தில் கொண்டால் கடந்த கால சூழலுக்கும் இன்றைய சூழலுக்குமான உண்மை நிலையை நாம் புரிந்து கொள்ளலாம்.

தமிழக அரசு போதுமான நிதியைப் பயிற்சி தருவதற்காக ஒதுக்கியும் தரமான பயிற்சிக்கான இலக்கில் இத்திட்டம் சற்றே பின்தங்கியுள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். தமிழக அரசு நடத்தி வருகிற அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் 30 ஆண்டுகளுக்கும் மேலாக செவ்வனே செயல்படுகிற ஓர் அமைப்பாகும். சிறந்த பயிற்றுநர்களை அங்கே பயன்படுத்துவதன் மூலம் இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்களை மீண்டும் அதிக அளவில் வெற்றி பெற வைக்க முடியும் என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் எதிர்கொள்ளக்கூடிய மற்றொரு முக்கியப் பிரச்சினை பற்றி இங்கே குறிப்பிட வேண்டும். அது வருவாய்த் துறையில் இருந்து பொருளாதார ரீதியாக நலிவுற்றோர், இதர பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் போன்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் அதற்கான சான்றிதழ்களைப் பெறுவதில் ஏற்படுகிற அசவுகரியங்கள் மற்றும் தேவையற்ற தாமதங்கள் ஆகும். எடுத்துக்காட்டாக, அண்மையில் முடிவுகள் அறிவிக்கப்பட்ட குடிமைப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள தேர்வர்கள் சிலர் தேர்வாணையம் கோரும் சான்றிதழ்களை இன்னும் சமர்ப்பிக்க முடியாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களின் நேர்முகத் தேர்வுக்கு முன்னும் , முடிந்த பின்னும் சான்றிதழ் பிரச்னையால் மிகுந்த கவலையோடு தான் முடிவுகளை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். அதிருஷ்டவசமாக சிலர் வெற்றி பெற்றுள்ளனர். சிலருக்கு சான்றிதழ் காரணமாகவே கூட வெற்றி வாய்ப்பு பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.தேர்வு முடிவு வெளியிடக்கூடிய குறுகிய கால இடைவெளிக்குள் சான்றிதழ் திருத்தத்துக்காக வருவாய்த்துறையை அணுகியபோது இச்சான்றிதழை ரத்து செய்த பின்னர்தான் புதிய சான்றிதழை வழங்க முடியும் என்று கூறி ரத்து செய்வதற்கான விண்ணப்பத்தைப் பெற்றது. அதை ரத்து செய்வதற்கு மட்டுமே ஒரு வாரத்துக்கு மேல் வருவாய்த் துறையில் தாமதமாகிறது. இறுதியில் மாவட்ட ஆட்சியர் வரை அணுகி முறையிட்ட பிறகே அச்சான்றிதழ் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் புதிய சான்றிதழுக்காக விண்ணப்பித்து மீண்டும் பல்வேறு முயற்சிகளின் மூலம் சான்றிதழ் பெற்று தேர்வாணையத்தில் அத்தேர்வர் சமர்ப்பித்தார். மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், அத்தேர்வர் வெற்றியும் பெற்று விட்டார்.எனவே, பொருளாதார ரீதியாக நலிவடைந்தோர், இதர பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் போன்ற சான்றிதழ்களை வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைத் தீர்க்க, விதிகளில் உரிய மாற்றங்களைதமிழக அரசு மேற்கொள்ளவேண்டும். சான்றிதழ்களை வழங்கும் அலுவலர்கள் போட்டித் தேர்வு எழுதுகிற தேர்வர்களுக்கு மட்டுமல்ல, உயர் கல்விக்காகவோ அல்லது அரசு உதவி பெறுவதற்காகவோ மாணவர்கள் அணுகும்போது அவர்களின் நெருக்கடியான நிலையைப் புரிந்து கொண்டு விதிகளுக்குட்பட்டு விரைவான சேவையை வழங்க வேண்டும். சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதம் தேர்வர்களுக்காக அரசு முன்னெடுத்துள்ள ஆக்கபூர்வமான திட்டங்களைப் பயனற்றதாக்கிவிடக் கூடும். ஆகவே, சான்றிதழ் வழங்குவதில் தாமதம் கூடாது.

## அமெரிக்காவுடன் இணைந்தால்

# கனடாவுக்கு 61 பில்லியன் டாலர் பாதுகாப்பு இலவசம்!

## டொனால்டு டிரம்ப் அதிரடி!!

வாஷிங்டன், மே.28

அமெரிக்காவுடன் கனடா இணைந்தால் 61 பில்லியன் டாலர் மதிப்பிலான தங்கக் கோள பாதுகாப்பு இலவசம் என்று டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அவ்வப்போது அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தியதாக அண்மையில் டிரம்ப் கூறியது சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியதுகுறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் இப்போது 50 மாகாணங்கள் உள்ளன. 51—வது மாகாணமாக கனடா அமெரிக்காவுடன் இணையவேண்டும் என்று டிரம்ப் தொடர்ந்து கூறிவருகிறார். இந்நிலையில் அமெரிக்காவுடன் கனடாஇணைந்தால் 61 பில்லியன் டாலர் மதிப்புள்ள தங்கக் கோளப்பாதுகாப்பு இலவசம் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடன்இணையமுன்வராவிட்டால் இதற்கான செலவை கனடா ஏற்க வேண்டி வரும் என்று சமூக ஊடகத்தில் டிரம்ப் பதிவிட்டுள்ளார்.

இதற்கு கனடா பிரதமர் மார்க் கார்னே எதிர்வினையாற்றியுள்ளார். கனடா ஒரு போதும் அமெரிக்கவுடன் இணைய முன்வராது என மார்க் கார்னே தெளிவுபடுத்தியுள்ளார்.

## கொரோனா பரவலை

# தீவிரமாக கண்காணித்து வருகிறோம்; முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை!

## மத்திய சுகாதாரத்துறை அறிவிப்பு!!

பாண்டிச்சேரி, மே.28–

கொரோனா பரவலை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். பொதுமக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்று மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

ஜூன் 21ம் தேதி சர்வ தேச யோகா தினத்தையொட்டி புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி சிலை திடலில் முன்னோட்ட யோகா தின உற்சவம் நேற்று நடைபெற்றது. புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தலைமை வகித்தார்.

துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் யோகா பயிற்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் பிரதாப் ராவ் யாதவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

யோகா என்பது உடல், மனநலம் காக்கும் பாரம்பரியக் கலையாகும். அதை சர்வதேச அளவில் செயல்படுத்தியவர் பிரதமர் மோடி. நாட்டில் கொரோனா பரவலை மத்திய சுகாதாரத் துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

ஆனால், பொதுமக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்பது கட்டாயமில்லை. மத்திய அரசும் அதை அறிவுறுத்தவில்லை. கொரோனா பரவல்நிலைக்கு ஏற்ப மாநில அரசுகளே முகக்கவசம் அணிவது குறித்த முடிவுகளைத் தீர்மானிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக யோகா பயிற்சி நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பேசும்போது, "யோகா கலை உடற்பயிற்சி மட்டுமல்ல, உடல், மனம், ஆன்மாவை ஒன்றிணைக்கிறது. யோகாசெய்தால்அமைதி, தூய்மை, சக்தி, பலம் ஆகியவை கிடைக்கும். மன அழுத்தத்துக்கான சரியான தீர்வாக யோகா அமைந்துள்ளது.

மருந்து இல்லாமல் இயற்கை வழியில் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ யோகா உதவும் " என்றார்.

தொடர்ந்து, காந்தி சிலை முன்பு தரையில் அமர்ந்து துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், மத்திய இணை அமைச்சர் பிரதாப்ராவ் யாதவ், பேரவைத் தலைவர் செல்வம், தலைமைச் செயலர் சரத்சவுகான் உள்ளிட்டோர் யோக பயிற்சி மேற்கொண்டனர். இதில் குழந்தைகள், இளைஞர்கள், மாணவ, மாணவிகள், முதியோர் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டனர். விழா நிறைவில் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.



கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் பெரியமுத்தூர் உள்வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) 6–ம் நாள் நிகழ்ச்சியில் கலெக்டர் தினேஷ்குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

# தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்ச மாட்டோம்!

## காஷ்மீர் முதல்வர் கருத்து!!

ஸ்ரீநகர், மே. 28

தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு ஒருபோதும் அஞ்ச மாட்டோம் என்று ஜம்மு–காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக பாரம்பரியத்திலிருந்து விலகி பஹல்காமில் ஒரு சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்துக்கு முதல்வர் உமர் அப்துல்லா நேற்று தலைமை தாங்கினார்.

ஜம்மு–காஷ்மீர் முதல்வராக உமர் அப்துல்லா பொறுப்பேற்றதில் இருந்து கோடைகால தலைநகர் ஸ்ரீநகர் அல்லது குளிர்கால

தலைநகர் ஜம்முவுக்கு வெளியே அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட முதல்வர் அலுவலக செய்திக்குறிப்பில், ''தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்ட பஹல்காமில் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட்டது. கோழைத்தனமான தீவிரவாத செயல்களால் நாங்கள் அச்சுறுத்தப்படவில்லை என்பதற்கான தெளிவான செய்தி இது. மக்களின் தைரியத்துக்கு வணக்கம் செலுத்தி பயத்தை பின்னுக்குத் தள்ளுவதை நோக்கமாக கொண்டது. ஜம்மு–காஷ்மீர் உறுதியாகவும், வலுவாகவும், அச்சமின்றியும் நிற்கிறது'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதல்வர் உமர் அப்துல்லா வெளியிட்ட தனிப்பட்ட பதிவில், ''உள்ளூர் மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்த நாங்கள் பஹல்காம் வந்துள்ளோம்'' என்று தெரிவித்துள்ளார்.

## ஆபரேஷன் சிந்தூரில்

# 72 பாகிஸ்தான் ராணுவ நிலைகள் அழிப்பு!

## எல்லை பாதுகாப்பு படை தகவல்!!

ஜம்மு, மே.28–

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது 72 பாகிஸ்தான் ராணுவ நிலைகள் முழுமையாக அழிக்கப்பட்டன என்று எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எப்) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஜம்மு பிராந்திய பிஎஸ்எப் ஐஜி சுஷாங்க் ஆனந்த் ஜம்முவில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: மே 7ம் தேதி முதல் 10ம் தேதி வரை ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இந்திய, பாகிஸ்தான் ராணுவங்களுக்கு இடையே மிகக் கடுமையான சண்டை நடைபெற்றது. ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய ராணுவம் அதிதீவிர தாக்குதல்களை நடத்தியது. இருதரப்புக்கு இடையே கடுமையான சண்டை நடைபெற்று கொண்டிருந்தபோது ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருந்து சுமார் 50 தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் ஊடுருவ முயற்சி செய்தனர்.

அந்த முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

மேலும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் செயல்பட்ட தீவிரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினோம். இதில் ஏராளமான தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிரான தாக்குதலின்போது அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்தினோம். குறிப்பாக பிஎஸ்எப் வீரர்கள் வித்வன்ஸக் துப்பாக்கிகளை பயன்படுத்தினர். இதன்மூலம் 1,800 கி.மீ. தொலைவு இலக்குகளை துல்லியமாக குறிவைத்து சுட முடியும்.

தானியங்கி ராக்கெட் லாஞ்சர்மூலம்சக்திவாய்ந்த குண்டுகள் வீசப்பட்டன. இதன்மூலம் 2,100 தொலைவு வரையிலான இலக்குகளை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தோம்.

மேலும் 2.7 எம்எம் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளையும் பயன்படுத்தினோம். இந்த துப்பாக்கிகள் மூலம் பாகிஸ்தான் ராணுவ டாங்கிகள் மற்றும் டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நடுத்தர இயந்திர துப்பாக்கி மூலம் பாகிஸ்தான் டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்த துப்பாக்கிகள் மூலம் ஒரு நிமிடத்தில் 600 முதல் 1000 குண்டுகளை சுட முடியும்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது பாகிஸ்தானின் 72 ராணுவ நிலைகள் முழுமையாக தகர்க்கப்பட்டன.

பாகிஸ்தான் ராணுவத்தின் ஏராளமான பதுங்கு குழிகள், கண்காணிப்பு கோபுரங்கள் அழிக்கப்பட்டன. காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் பிஎஸ்எப் படையை சேர்ந்த வீராங்கனைகளே தாக்குதலை நடத்தினர். அவர்களை பாராட்டி வாழ்த்துகிறேன்.

இவ்வாறு பிஎஸ்எப் ஐஜி சுஷாங்க் ஆனந்த் தெரிவித்தார். பிஎஸ்எப் துணை கமாண்டர் நேகா கூறும்போது, "ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது எனது தலைமையிலான படை பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் முகாமிட்டு இருந்தது. எங்களது படையில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர். குண்டு மழைக்கு நடுவில் எதிரியின் ராணுவ நிலைகளை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தோம். அதேநேரம் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருந்து ஜம்மு காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் ஊடுருவ முயன்றனர். அவர்களையும் விரட்டி அடித்தோம். இதில் ஏராளமான தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்று தெரிவித்தார்.

# நார்வே செஸ் முதல் சுற்றில் குகேஷை வீழ்த்தினார் கார்ல்சன்

நார்வே, மே. 28–

நார்வே செஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன், உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷை வீழ்த்தினார்.




நார்வே கிளாசிக்கல் செஸ் போட்டி அந்நாட்டில் உள்ள ஸ்டாவஞ்சர் நகரில் நடைபெற்று வருகிறது. 6 வீரர்கள் கலந்து கொண்டுள்ள இந்தத் தொடரின் முதல் சுற்றில் உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன், உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷுடன் மோதினார். இதில் கார்ல்சன் வெள்ளை காய்களுடனும், குகேஷ் கருப்பு காய்களுடனும் விளையாடினார்கள். 4 மணி நேரத்துக்கும் மேல் நீடித்த இந்த ஆட்டத்தில் 55வது நகர்த்தலின் போது குகேஷ் செய்த தவறு காரணமாக கார்ல்சன் வெற்றி பெற்றார்.

முதல் சுற்றின் முடிவில் கார்ல்சன் 3 புள்ளிகளுடன் முதலிடத்தை 2ம் நிலை வீரரான அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். அவர், தனது முதல் சுற்றில் சகநாட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டரான பேபியானோ கருனாவை தோற்கடித்தார். இந்திய கிராண்ட் மாஸ்டரான அர்ஜூன் எரிகைசி, சீனாவின் முதல் நிலை வீரரான வெய் யி மோதிய ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

கிளாசிக்கல் ஆட்டம் டிராவில் முடிவடைந்தால் வெற்றியை தீர்மானிக்க அர்மகேடான் விளையாட்டு நடத்தப்படும். இதில் அர்ஜூன் எரிகைசி வெற்றி பெற்றார். இதனால் அவருக்கு 1.5 புள்ளிகள் வழங்கப்பட்டது. வெய் யி ஒரு புள்ளியை கைப்பற்றினார். மகளிர் பிரிவில் இந்தியாவின் ஹோனேரு ஹம்பி, சக நாட்டைச் சேர்ந்த ஆர். வைஷாலியை தோற்கடித்தார்.



ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வெங்கடேஷ் சோலார் பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த காய்கறி மற்றும் வணிக வளாகத்தின் கட்டுமானப் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில்கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அர்பித் ஜெயின், மாநகராட்சி ஆணையாளர் தனலட்சுமி உள்பட பலர் உள்ளனர்.

## அங்கீகாரமற்ற நர்சரி பள்ளிகள் மீது நடவடிக்கை:

# பாரபட்சமின்றி மேற்கொள்ள அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவுறுத்தல்!

சென்னை, மே. 28–

